578/94

செந்தமிழ்ச் செல்வி

10

66 சூன், 1992

7L
031ம211,N27
N92.66.10
191732

578
94 A-2

செந்தமிழ்ச் செல்வி

இயக்குநர்,
...ஆ... மற்றும்
...ரலொர்... ஆராய்ச்சி
2... ஆக...
...நாடு ... ... ,
...ன்னை - 600 008.

உள்ளுறை

	பக்கம்
இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்கு	௫௬௧
மரபியல் ஆராய்ச்சி	௫௬௯
பக்தியிலக்கிய வகைமை—சில வரையறைகள்	௫௭0
திருவைந்தெழுத்தின் திறன்	௫௭௧
தமிழ் நாள், கிழமை, திங்கள் இதழ்களில் எழுதுவோரின் சிந்தனைக்கு	௫௮0
அஜமும் ஆனைந்தும்	௫௮௯
''சண்டிகா''	௫௯௫
பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார்	௫௯௪
கவுந்தியடிகளின்—பெயர்க்காரணம்	௫௯௮
மதிப்புரை	௫௯௯

சிலம்பு - ௬௬ ௲ பரல் ௧0 ஜூன் 1992
திருவள்ளுவர் ஆண்டு-௨0௨௩ வைகாசி

"செந்தமிழ்ச் செல்வி"

(செந்தமிழ்த் திங்கள் இதழ்)

நிறுவனர் : தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை

இதழாசிரியர் குழு

முனைவர் பொன். கோதண்டராமன்
முனைவர் தமிழண்ணல்
முனைவர் க. ப. அறவாணன்
முனைவர் பொன். சௌரிராசன்
முனைவர் கு. சுந்தரமூர்த்தி
முனைவர் சொ. சிங்காரவேலன்
பேராசிரியர் கே. எஸ். சிவராமலிங்கம்
கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்
முனைவர் வீ. ப. கா. சுந்தரம்

ஆசிரியர் இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிட்.,

பிற பதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

வானவில்—மதுரை இளங்குமரனார்	10 00
அந்த உணர்வு எங்கே? ,,	10 00
மூன்றாவது உலகம்—இன்குலாப்	15 00
இந்து சமயக் களஞ்சியம்—மு. திரவியம்	60 00
திருமந்திரத் தெளிவு—புலவர் த. கோவேந்தன்	27 00
சைவமும் நாமும் —சைவப் புலவர் எஸ். தில்லைநாதன்	24 00
திருவருட்பிரகாச வள்ளலார் உபதேசம் (வசன பாகம்)	25 00
ஜீவகாருண்ய ஒழுக்கம்	5 00
மாணவர் தமிழ்ப் பிழையை நீக்க இலக்கண அறிமுகம் —முத்தெழிலன்	15 00
தமிழ் கூறும் நல்லுலகம் — பொறிஞர் புருடோத்தமன்	65 00
தமிழ்ச் சமுதாய நோய்கள் வேரும் விழுதும் —க. ப. அறவாணன்	40 00
தமிழர் தடங்கல் ,,	20 00
அர்த்தமுள்ள இந்துமதம் ஓர் ஆய்வு —பேரா. டாக்டர் மன். இரா. செயராமன்	100 00
நவில்தொறும் நூல்நயம்—அமுத இளவழகன்	25 00

S78
94

செந்தமிழ்ச் செல்வி

தி. வ. உ0உரு-வைகாசி
சூன்—1992
சிலம்பு-கக: பரல்-கo

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்கு

நுண்மாண் நுழைபுலம் வாய்த்த புலவர் பெருமக்கள் கூடி ஒண்தீந்தமிழினை ஆய்வு செய்தமையைச் சங்க காலப் பாடல்கள் உணர்த்துகின்றன. உலகமறையெனப் போற்றத் தக்க திருக்குறளைப் புலவர்கள் ஏற்க மறுத்த சூழலில் சங்கப் பலகை அதனை மட்டும் ஏற்றுக்கொண்டு பிற புலவர்களை/அவர்தம் எழுத்துக்களை நீரில் தள்ளியதாக ஒரு கதை. காலம் அப்பலகை செய்தது சரியென நிலைநாட்டி விட்டது. இறைவனேயாயினும் நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே எனப் பிறர் பாட்டில் குறை காணும் ஆய்வு மனம் படைத்த நக்கீரர் வாழ்ந்த தமிழகம்.

19ஆம் நூற்றாண்டு தனிப்பட்ட அறிஞர்களிடமே கருத்து மோதல்களைக் கண்டது. கண்டனங்கள், மறுப்புக்கள், சூறாவளிகள், மறுப்புக்கு மறுப்புகள் என்று வாதம் வலுத்த காலம். 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்நிலை நீடித்தது.

மேலைநாட்டு முறைப்படி ஆய்வாளர்கள் கூடிக் கட்டுரை படித்தல், ஆய்வுரை நிகழ்த்துதல் என்ற முறை இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழில் தொடங்கியது. மறைத்திரு. மறைமலையடிகளார் தொடங்கிய சைவ சித்தாந்த சமாஜம் (சைவசித்தாந்தப் பெருமன்றம்) தன் ஆண்டு விழாவை ஆண்டுதோறும் பல்வேறு அறிஞர்கள் பங்கு கொள்ளவும் சிறப்புரைகள் ஆற்றவும் வாய்ப்பளித்துச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. இதில் சைவர் மாநாடு, சைவமங்கையர் மாநாடு, சைவ இளைஞர் மாநாடு எனப் பல்வகையான நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. இது தமிழகத்தின் பல்வேறு ஊர்களிலும் வெளி மாநிலங்களிலும் வெளிநாடுகளிலும் ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வோர் இடத்தில் சிறப்பாக நடைபெறுகிறது. இம் மாநாடுகளில் ஆற்றப்பெறும்

92-66-10

தலைமையுரைகளும் சிறப்புரைகளும் இம் மன்றத்தின் 'சித்தாந்தம்' இதழில் வெளிவருகின்றன. இம் மன்றத்தின் 86ஆம் ஆண்டு விழா அண்மையில் கச்சியம்பதியில் நடைபெற்றது.

அடுத்ததாகக் குறிப்பிடத்தக்கது சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நடத்திய இலக்கிய மாநாடுகள் ஆகும். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, பெரியபுராணம், திருவிளையாடல் புராணம், சிற்றிலக்கியங்கள் எனத் தனித்தனியாக மாநாடு நடத்தி, இவற்றை எளிய மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் கழகம் செய்தது. இம் மாநாடுகளின் சிறப்பு அன்று தமிழகத்தில் வாழ்ந்த பேரறிஞர்கள் அனைவரும் இம் மாநாடுகளில் கலந்துகொண்டு ஆய்வுரைகள் நிகழ்த்தியமை ஆகும். இதன் மற்றொரு சிறப்பு, மாநாடு நடைபெறும்போது அதில் நிகழ்த்தப்பெறும் சொற்பொழிவுகள் அனைத்தும் நூல் வடிவில் வெளியிடப் பெற்றதாகும்.

நாடு விடுதலை பெற்றபின் ஆங்காங்கு தமிழ் மாநாடுகள் நடைபெறலாயின. இவை அமைப்புத் தொடர்போ, காலத் தொடர்போ இன்றி திகழ்ந்தவை.

தமிழாய்வுக்குச் சிறப்பிடம் கொடுத்து உலக முழுவதுமுள்ள தமிழறிஞர்களை ஒருங்கிணைத்து ஆய்வுக்கு முதலிடம் கொடுத்து முதன் முதலாக உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கூட்டிய பெருமை தவத்திரு. தனிநாயக அடிகளாரையே சாரும். இன்று எட்டாவது மாநாடு நடைபெறும் சூழல் உள்ளது. மலேசியா, சென்னை, இலங்கை, பாரிசு, மதுரை, மலேசியா, மொரீசியசு போன்ற பல நாடுகளில் இம் மாநாடு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

இம் மாநாடுகளில் மேனாட்டறிஞர்கள் பலர் கலந்து கொண்டதுடன் பெரும்பாலான கட்டுரைகள் ஆங்கிலத்திலேயே அமைந்தன. மலேசியா, சென்னை, இலங்கை, பாரிசு, மதுரை ஆகிய ஐந்து மாநாட்டு ஆய்வுக் கட்டுரைகளும் பெருந்தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

மொழிக்காக உலகளாவிய அளவில் மாநாடு நடத்தும் பாங்கு பிறமொழியாளரைக் கவர்ந்தது. தமிழைப் பின்பற்றி தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, சமஸ்கிருதம் போன்ற மொழி பேசுவோரும் உலக மாநாடுகளை நடத்தத்

தமிழ்நாடு
91732

தொடங்கினர். எனினும் தமிழ்மொழிக்கு நடத்தப்பெறும் மாநாடுகளே பிற துறை உலக மாநாடுகளுக்கு இணையாக நடத்தப்பெறுகின்றன. பிறமொழி மாநாடுகள் ஒன்றிரண்டு நடத்தப்பெற்றபின் ஓய்ந்து போயின.

முதல் உலகத் தமிழ் மாநாடு நடந்து முடிந்தபின் இத்தகைய மாநாட்டின் பயன் முழுதும் உணரப்படலாயிற்று. ஆண்டுதோறும் இத்தகைய மாநாடுகள் நடத்தப்பெற இயலாது என்ற நிலையில் பல்கலைக் கழகத் தமிழாசிரியர்களின் ஆய்வுத் திறனுக்கு விருந்தளிப்பதுபோல் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மாநாடு ஆண்டுதோறும் கூடலாயிற்று.

உலகத் தமிழ் மாநாடுகளில் எல்லாத் தமிழாசிரியர்களும் கலந்துகொள்ள முடியாத நிலை. அதுவும் 3 அல்லது 4 ஆண்டுகட்கு ஒருமுறை கூடும் வாய்ப்பு. இதனால் ஆண்டு தோறும் பல்கலைக்கழகத் தமிழாசிரியர்கள் ஒன்றுசேர வாய்ப்பளிக்கும் வகையில் இம் மாநாடு - கருத்தரங்குகளை நடத்த இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் தொடங்கப் பெற்றது. இதை முன்னின்று நடத்திய பொறுப்பு டாக்டர். எஸ். அகத்தியலிங்கம் அவர்களையே சார்ந்திருந்தது. 1969இல் தொடங்கப்பெற்ற இம் மன்றம் அண்மையில் டில்லியில் இருபத்தி மூன்றாவது கருத்தரங்கை நடத்தி முடித்துள்ளது.

இம் மாநாடுகளின் சிறப்புக்கள் பல. முதலாவது மாநாட்டில் படிக்கப்பெறும் கட்டுரைகள் முழுவதும் முன்னரே நூல் வடிவில் அச்சிடப்பெற்று மாநாட்டில் எல்லோர்க்கும் கிடைக்கச் செய்வது. இது பெரும் சாதனை. மிகவும் பாராட்டுக்குரியது.

அடுத்து பல்கலைக் கழகத் தமிழாசிரியர்களில் பத்தில் ஒரு விழுக்காட்டினரையாவது ஆய்வு செய்யும் மனப் பாங்கைத் தூண்டி விடுவதாகும்.

இம் மாநாடுகளில் படிக்கப்பெறும் கட்டுரைகளின் பொருள்கள் பற்றி ஓர் ஆய்வைப் புதுவைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர். க. ப. அறவாணன் இவ்வாண்டு வெளியான ஆய்வுக் கோவையில் முன்னுரையில் தந்துள்ளார். அவரே சில செய்திகளையும் குறிப்பிட்டுள்ளார்.

22 ஆண்டுகளில் 27,411 பக்கங்களில் 4956 கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இவற்றைத் தொல்காப்பியம் முதல் அறிவியல் ஈறாக 17 தலைப்புகளில் பிரித்து ஒவ்வொரு தலைப்பிலும் தொடக்க முதல் இன்று வரை எத்தனை கட்டுரைகள் வெளிவந்துள்ளன? எந்தத் துறைகளில் ஆய்வு பெருகி எவ்வெவற்றில் ஆய்வு சுருங்கி வருகிறது என்பதைப் புள்ளி விவரங்களுடன் விளக்கியுள்ளார். சில செய்திகள் இன்றைய தமிழாசிரியர்களின் சிந்தனைப் போக்கைத் தெளிவுபடுத்துவனவாய் உள்ளன.

தொடக்கத்தில் சங்க இலக்கியம் பற்றிய ஆய்வு 27.1 விழுக்காட்டிலிருந்து 1991இல் 4.7 வீதமாகக் குறைந்து விட்டது.

இதற்கு மாறாக, தற்கால இலக்கியமும் நாட்டுப்புறவியலும் ஆய்வில் கூடியுள்ளது. தற்கால இலக்கியம் 10.3 இலிருந்து 32.9 ஆகவும் நாட்டுப்புறவியல் 1.9 இலிருந்து 10.8 ஆகவும் உயர்ந்துள்ளது.

மொழியியல் தொடக்க காலங்களில் வளர்ச்சிப் போக்கில் காணப்பட்டுப் பின்னர் தேய்ந்துவிட்டது. 1970இல் 14 ஆக இருந்தது. 1974இல் 23.1 ஆக உயர்ந்து பின்னர் குறையத் தொடங்கி 1991இல் 4.7 ஆகக் குறைந்துவிட்டது.

1991இல் தற்கால இலக்கியம் (33) சமயம் (13) இலக்கணம் (11) நாட்டுப்புறவியல் (11) ஆகிய நான்கு துறைகள் 68 விழுக்காட்டையும் பிற 13 துறைகள் 32 விழுக்காட்டையும் பெற்றுள்ளன.

சுருங்கக் கூறின் அண்மைக் காலத்தில் ஆய்வில் எளிமைக் கூறுகள் பெருகிவிட்டன. ஆழ்ந்த ஆய்வு வரவரக் குறைந்து கொண்டே போகிறது. எந்த ஆய்வும் செய்யாமல் இருப்பதைவிட இந்த ஆய்வாவது நடைபெறுகிறதே என்று மகிழ்ச்சிதான். இருப்பினும் ஆய்வு மேலும் நுட்பமாக அமையின் நல்லது.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழில் பின் இரண்டும் ஆய்வில் புறக்கணிக்கப்பட்டுள்ளன. தமிழாசிரியர்களிடம் இசைபற்றிய புலமை பெருக வேண்டும். தமிழிசை என்பது நீண்ட வரலாற்றினை உடையது. அதைப் பற்றிய ஆய்வு இடம் பெறாதது வருந்தத்தக்கது; நாடகமும் இவ்வாறே.

தொடக்க நிலையில் மகளிரின் ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றதைவிட அண்மைக் காலங்களில் அவர்களின் பங்கு கூடிவருவது பாராட்டத்தக்கது. 1992இல் 30 விழுக்காடு உள்ளது வரவேற்கத்தக்கது.

அறிவியல்தமிழ் நான்காவது தமிழாக இடம் பெற வேண்டும் என்ற வேண்டுகோள் எழுப்பப்பெற்று வருகின்ற சூழலில் அறிவியல்தமிழ் பற்றிய ஆய்வு மிகமிகக் குறைவாகவே உள்ளது.

கல்வெட்டு, வரலாறு, மானுடவியல், சமயம், தத்துவம் போன்ற துறைகளில் ஆய்வு பெருக வேண்டும்.

அந்தந்த ஆண்டில் நூற்றாண்டு விழாக் காணும் தமிழறிஞர்களின் தொண்டு பற்றியும் அவர்கள் சார்ந்திருந்த துறை பற்றியும் சிறப்பாய்வு இடம் பெற வேண்டும்.

காட்டாக, யாழ்நூல் கண்ட விபுலானந்தர் நூற்றாண்டு 91—92இல் கொண்டாடப் பெறுகிறது. அவருடைய படைப்புகளைப் பற்றியும் அவர் ஈடுபட்ட தமிழிசை பற்றியும் இவ்வாண்டு ஒரு கட்டுரை கூட வராதது வருந்தத்தக்கது.

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற முயற்சி பெருமுயற்சி. பாராட்டத்தக்கது. வரவேற்கத்தக்கது. இதில் எல்லாத் தமிழாசிரியர்களும் கலந்துகொள்ள வேண்டும். ஆயிரக்கணக்கில் கட்டுரைகள் வரவேண்டும். அவற்றில் துறைக்கு இத்தனை என்று மொத்தத்தில் 20 துறைகளில் 100 கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து, ஆழமான ஆய்வுமிக்க அந்த 100 கட்டுரைகளை நூலாக்கி எல்லோரும் அவற்றைப் படிக்க வேண்டும் என்ற சூழ்நிலையை உருவாக்கினால் ஆய்வு நல்ல முறையில் வளர உதவும் என்பதில் ஐயமில்லை.

———

முடிதல்: உலத்தல் = முடிதல். உறுதல் = தொடுதல், முட்டுதல் உறு — இறு — ஈறு. இறு — இறுதி இறுதல் = முடிதல். இறு—இற—இறப்பு = சாவு. இறுத்தல் = கடமையைத் தீர்த்தல்; வரி செலுத்துதல். இறு — இறை = கடமை (வரி) இறுத்தல் = வழிச் செலவை விட்டிருத்தல், தங்குதல், இறு — இறை = இறைவன் = எங்கும் தங்கியிருப்பவன்.

— பாவாணர் (முதல் தாய்மொழி, பக். 97)

மரபியல் ஆராய்ச்சி

கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்

(முன் இதழ், பக். ௬௨௪-ன் தொடர்ச்சி)

குறிப்பால் புலப்படும் இடமாற்றம் :

''மூங்கா வெருகெலி மூவரி அணிலொ
டாங்கவை நான்கும் குட்டிக் குரிய''

என்னும் நூற்பாவை அடுத்து,

''கோடுவாழ் குரங்கும் குட்டி கூறுப''

என்னும் நூற்பா இருத்தல் வேண்டுமெனக் கண்டோம்.

ஆயின், ஆங்கிருக்கும் ''பறழெனப் படினும் உறழாண் டில்லை'' என்னும் நூற்பா எங்கே இடம் பெற்றிருக்க வேண்டும்? கோடுவாழ் என்பதை அடுத்தே இருக்க வேண்டுமா? வேறிடம் பெயர்த்தமைக்க வேண்டுமா? இவ் வினாக்கள் எழும்புதல் இயற்கை;

மூங்கா வெருகு எலி அணில் என்பவை பறழ் என்னும் இளமைப் பெயர் பெறுதற்குச் சான்று காணாமையால், ''இவை இக்காலத்து வீழ்ந்தன'' என்று பேராசிரியர் அமைத்தார். ஆனால், 'பறழ்' என்னும் இளமைப் பெயர் மூங்கா வெருகு எலி அணில் என்பவற்றுக்குச் சான்று காணாத பேராசிரியர் 'மந்திப்பறழ்' என்னும் வழக்காறு உண்மை கண்டு.

''கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி''

என்னும் குறுந்தொகை (69) யைக் காட்டி 'உறழாண்டில்லை' என்னும் மிகையால் அமைத்துக்கொண்டார். இதனால், ஆசிரியர் குறித்தவற்றுக்குச் சான்று கிட்டவில்லை என்பதும், அவர் குறிக்காத குரங்குக்குச் சான்று கிட்டியது என்பதும்

அறிந்துகொள்ளலாம். இனிக், குரங்கு மட்டும் பறழ் என்னும் இளமைப் பெயர் கொண்டதில்லை என்றும், நாய், பன்றி, புலி, முயல் ஆகியனவும் பறழ் என்னும் இளமைப் பெயர் கொண்ட சான்று உண்டு என்றும் அறிந்துகொள்ள வாய்க்கின்றது.

''பறழொடு வதிந்த......நீர்நாய்'' —அகம் 336

''பன்றிப் பறழ்'' ...... —பட். 75

''வாள்வரிப் பறழ்'' —சிலப். 25 : 49

''முயற்பறழ் உகளும்'' —அகம் 384

இங்குச் சுட்டப்பெற்றுள்ள நாய், பன்றி, புலி, முயல் என்பவை பறழ்ப் பெயர் பெறுதற்கு இலக்கணம் இல்லை. பறழ்ப் பெயர் பெறும் என இலக்கணம் கூறிய மூங்கா வெருகு எலி அணில் என்பவற்றுக்கு இலக்கியச் சான்று இல்லை.' இக் குறிப்பு என்ன செய்தியை வெளிப்படுத்து கின்றது? இல்லாததொரு சிக்கலை வல்லாண்மையாக வைத்துவிடுகின்றதன்றோ? இச் சிக்கலைச் சிக்கலின்றி அவிழ்க்க அல்லது விடுவிக்கப் 'பறழ் எனப்படினும் உறழாண் டில்லை' என்னும் நூற்பாவை இடப் பெயர்ச்சி செய்ய வேண்டும். ஏனெனின், அஃது இடம் பெயர்ந்து வந்துள்ளது என்பது திட்டவட்டமாகி விட்டது ஆதலால்! அதனை எங்கே இடமாற்றம் செய்யவேண்டும்?

''அவற்றுள்,
பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை'' (4)

''தவழ்பவை தாமும் அவற்றோ ரன்ன'' (5)

என்னும் நூற்பாக்களை அடுத்து,

''பறழ் எனப்படினும் உறழாண் டில்லை'' என்னும் இந் நூற்பா அமைந்திருக்க வேண்டும். அவ்வாறாயின் பறப்பவை யும் தவழ்பவையும் 'பார்ப்பு' 'பிள்ளை' என்னும் இளமைப் பெயர்களுடன் 'பறழ்' என்னும் இளமைப் பெயரையும் பெறும் என்னும் பொருள் தந்து சான்று சிறக்க வாய்த்து ஆன்ற வாழ்வு பெறுவதாகுமாம்.

இனி மந்தி, 'பறழ்' என்னும் இளமைப் பெயர் பெறுதலை எடுத்துரைத்தார் பேராசிரியர். மந்திப் பறழ், மற்றைப் பறழ்களைப் போல் அல்லாமல் 'வன்பறழ்' என்று வழங்கப்படுதலே பெருவரவிற்றாம். மந்தியொடு குரங்கு கடுவன் என்பவற்றின் பறழ்களும் அறிய வருகின்றன.

மந்திப்பறழ்,

'துய்த்தலை மந்தி வன்பறழ்' —நற். 95

'புன்றலை மந்தி வன்பறழ்' —நற். 168

எனப்படுகின்றது. மேலும் நற். 233, 379; குறுந். 69; ஐங்குறு 272, 273 இன்ன பிற இடங்களிலும் பயில வழங்குகின்றது.

'குரங்கின் பறழ்' (ஐங். 278) 'கடுவன்பறழ்' (குறுந். 26) என்பனவும் கழக நூல்களில் இடம் பெற்றுள.

மந்தியின் பறழை 'வன்பறழ்' என்பானேன்? 'குரங்குப் பிடி' என்று வலிதாகப் பற்றிப் பிடிப்பதைக் கூறுவது வழக்கமாம். அதனை மெய்ப்பிப்பது போல, 'வன்பறழ்' என்றனராகலாம். சங்கச் சான்றோர் காலத்திற்கு நெடுங் காலம் முற்பட்டவர் தொல்காப்பியர் என்பது அவர் மந்திப் பறழைச் சுட்டாமையால் அறியக் கூடியதாம்.

குறளனாகிய ஒருவனைப் 'பறழ்மகன்' என்கிறது கலித்தொகை (94; 6). அப் பறழ் மகன், 'ஆண்டலைக் கீன்ற பறழ்மகன்' எனப்படுகிறான். ஆண்டலைப் பறவைக்கு அதன் பெட்டையீன்ற பறழ்போலும் மகன் என்பது அதன் பொருளாம். ஆதலால் பறவையின் இளமைப் பெயர்களுள் 'பறழ்' என்பதும் ஒன்று என்பது தெளிவாகின்றது.

இவற்றால் தவழ்பவையும் பறப்பவையும் பறழ்ப் பெயர் பெறுதல் சான்றுகளால் மெய்பிக்கப்படுதல் தெளிவாம். ஆகலின்,

''அவற்றுள்
பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை''

''தவழ்பவை தாமும் அவற்றோ ரன்ன
பறழெனப் படினும் உறழாண் டில்லை''

என இந் நூற்பாக்கள் முறையே வைக்கப்பெறுதல் முறைமையாம் என்பது முட்டற விளங்குதல் கொள்க.

இளமைப் பெயர் வகையில் இவண் காட்டிய இட மாற்றம் போலவே மரபியலின் பிற்பகுதி இடைப்பகுதி ஆகியவற்றிலும் சிலவுள. இடைச் செருகல், கடைச் செருகல், அடிச் செருகல் என்பனவும் உள. ஆங்காங்கு அவ்வவற்றைக் காட்டுதும்.

தூய்மை: அழுக்கெல்லாம் பெரும்பாலும் பிற நிலையிலிருப்பதாகும். அழுக்கற்ற சாயந் தோய்க்காத ஆடை வெண்மையாயிருப்பதாலும், சுவரின் அழுக்கைப் போக்க வெண் சுண்ணம் பூசுவதாலும் வெண்மை தூய்மைக் கடையாளமாம். துள் — துய் — துய்ய = தூய. தூய் — து — துப்பு — துப்புரவு = தூய்மை. துய் — தூய் — = தூய்மை. தூய் — தூ. புல் — பள் — பால் — வால். வான்மை — தூய்மை. வாலாமை = தூய்மையின்மை. வாலறிவு = தூய அறிவு. முல் — முல்லை = கற்பு. முள் — வெள் — வெள்ளை = தூய்மை; தூய அடை. வெண்பா — வெள் — வெளி — வெண்பா. எக் காரணத்தையிட்டும் வேற்றுத்தளை விரவாத தன்தளை கொண்டே இயலும் தூய்மையுடைய வெண்பா (வெள் = பா).

வெள்ளை = களங்கமற்றவன், சூதுவாதில்லாதவன். ''வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை'' என்றார் ஔவையார். வெள் — வெள்ளந்தி = கள்ளங்கலடற்றவன்.

—பாவாணா (முதல் தாய்மொழி, பக். 148)

யினைச் சமய இயக்கத்திற்கான வழியாக அமைத்தனர். இங்ஙனம் தமிழ்ப்பாக்கள் சமய வாழ்விற்கான கருவியாயின. தமிழ் பக்திமொழி எனச் சிறப்புப் பெயரைப் பெறத் தோற்றுவாயும் இக்காலத்தில்தான் செய்யப்பட்டது. இதனால் பாடல் முறையிலும் மாற்றம் ஏற்பட்டது. இதன் விளைவாகப் பாடுபொருள் மக்கள் வாழ்வினின்றும் மாறித் தெய்வப் பரவலாக அமையலாயின. பாடல் யாப்பு நால்வகைப் பாக்களினின்றும் மாறி இசை சார்ந்த பாவினமாக மாற்றம் பெறலாயிற்று.

தன்னுணர்ச்சிப் பாக்களின் தலைமை:—

பக்தியியக்கக் கவிஞர்கள் புறவுலகைப் பிரதிபலித்துக் காட்டும் நிலையையும் ஓரளவு புறக்கணித்து, தங்கள் உள்ள உணர்ச்சிகளையும், இறைவன்மீது கொண்ட பேரீடுபாட்டையும் தன்னுணர்ச்சிப் பாடல்களாக வடித்தனர். தன்னுணர்ச்சிக் கவிஞர்களிடம் புதிய வடிவங்களைப் படைக்கும் போக்கும், நாட்டுப்புற இலக்கிய வடிவங்களுக்குப் புத்துயிர் அளிக்கும் போக்கும் காணப்படுகிறது. பக்தியிலக்கியங்கள் அகவெளியீட்டுக் கவிதைகளாய் இலங்குகின்றன. கவிஞனின் அகவுணர்ச்சிகளையும், அவன் மனத்தில் இடம்பெறும் உள்ளக் காட்சிகளையும் வெளிப்படுத்துவதே அகவெளியீட்டுக் கவிதையாகும். மாறுதலுக்கு இடையே நிலைபேற்றையும், அலைவுக்கு இடையே அமைதியையும், அழிவுக்கு இடையே என்றுமுள தன்மையையும் நாடி ஏங்கி உணர்தலே அகப்பாட்டின் இயல்பாகும். தமிழிலக்கியத்தில் தன்னுணர்ச்சிப் பாக்கள் தன்னாட்சி செய்த காலம் பக்தியிலக்கியக் காலக் கட்டமாகும். இக்காலத்தில் பல்வேறு உணர்ச்சிக் கனிவுகளின் வெளிப்பாடாகத் தன்னுணர்ச்சிப் பாடல்கள் புறப்பட்டன. பக்தியிலக்கியத்தில் தன்னுணர்ச்சிப் பாக்கள் தனிப்பெரும் தலைமை ஏற்றதற்குப் பல காரணங்கள் உண்டு. தன்னுணர்ச்சிக் கவிஞர்கள் பாக்களைப் புனைய இலக்கிய வழக்கை விட மக்களின் பயில் மொழியைப் பெரிதும் நாடினர். உணர்ச்சிகள் யாவும் மாற்றுருப் பெறாமல் பிறந்த மேனியாய் வந்து விழுந்தன. தன்னுணர்ச்சிப் பாக்களின் ஒரு பகுதி மரபால் அமைந்தது; மறுபகுதி மரபைத் தவிர்த்தது. இதுவே தன்னுணர்ச்சிப் பாக்களின் வெற்றிக்குக் காரணம். நாட்டுப்புறப் பாடல்களின் எளிமையான யாப்பு, உணர்ச்சி பொங்கித் ததும்பும் எளிய நடை, மரபுகளுக்கு அடிமைப்படாத நெகிழ்ந்து

கொடுக்கும் இலக்கிய வடிவம் ஆகிய அனைத்திற்கும் பக்தியிலக்கியம் புத்துயிர் அளித்தது.

பக்திப் பாடல்கள் அகமன அனுபவங்களின் வெளிப்பாடுகளாகும்.[12] அகப்பாடல்களிலிருந்தே பக்திப்பாடல்கள் தோன்றின. ஆயினும், அகப்பாடல்களுக்கும், பக்திப்பாடல்களுக்கும் ஓரளவு வேறுபாடு உண்டு. அகப்பாடலாவது அகமனத்தில் தோன்றும் இன்பம் அதாவது தனக்குத் தானே அனுபவிக்கும் இன்பம் காரணமாகத் தோன்றுவது. ''பக்திப்பாடல்கள் அனைத்தும் அவற்றை ஆக்கிய தனிப்பட்ட மக்களின் அனுபவங்கள் என்று கொள்ளாமல் அவை சமுதாயம் முழுவதற்கும் பொதுவான அனுபவங்கள்''[13] எனக் கொள்ளலாம். எவ்வகைப் பாடல்களைக் காட்டிலும் அகப்பாடலே ஆன்மவெளியீட்டிற்குச் சிறந்த கருவியாய் அமைந்தன. எனவே, அகப்பாடல்கள் நாளடைவில் பக்திப் பாடல்களில் நுழைந்தன. ஒவ்வொரு மனிதனிடமுள்ள ஆன்மாவின் சிறப்பை அறிய பெரிய வாய்ப்பு ஏற்பட்டது. காதல், கடவுள் என்ற இரண்டும் தன்னலமற்றவை. இரண்டும் பிரிக்க முடியாதவை; ஆதலால், காதலைக் கருவியாகக் கொண்டு கடவுளை அடைய முயன்றனர் முன்னோர்.

அக இலக்கியக் கொள்கை:—

பக்திப்புலவர்கள் கையில் சங்க கால மனிதக்காதல் தெய்வீகக் காதலாக மாறியது. இறைவனிடம் உள்ள பக்தியால் இறையன்பைப் பெற்று அவ்வன்பெனும் அருட்பெருக்கில் கரைந்து இறைவனோடு ஒன்றிவிடுதலையே பக்திப்பனுவல்கள் நுவல்கின்றன. ''பக்தியியக்கக் காலக் காதலெல்லாம் இறைவனிடம் கொண்ட காதலாக ஒருதலைக் காதலாக உள்ளன.''[14] பெயர் குறிப்பிடப்படாமையால் இன்னார் என்று உணரப்படாத கற்பனை மனிதர் இருவரின் காதலாக இருந்த பாக்கள் மாறி தெய்வத்தின்மீது கொண்ட காதலைப் பாடும் பாக்களாக வளர்ந்தன. கற்பனைக் காதலுக்குப் பின்னணியாக அந்தந்த ஊர்களின் இயற்கைச் சூழல் வருணிக்கப்பட்டிருந்தது மாறிக் கடவுளிடம் செலுத்தும் பக்திக்குப் பின்னணியாக அந்தந்தக் கோயில் தலங்களைச் சூழ்ந்த இயற்கையழகைப் பற்றிய வருணனைகள் அமைந்தன.[15]

பக்திப் பனுவல்களில் இடம்பெறும் அகப்பொருள் பாடல் தலைவன் இறைவன். ஆகவே, தலைவன் கூற்றாக

பக்தியிலக்கிய வகைமை — சில வரையறைகள்

முனைவர் சிவ. மங்கையர்க்கரசி,
தமிழ்த்துறைத் தலைவர், அரசினர் மகளிர் கல்லூரி,
மயிலாடுதுறை.

(முன்னிதழ், ௯௫0ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமய இலக்கியமும் பக்தியிலக்கியமும் : —

சமயம் என்பது கடவுள், மனிதவாழ்வு என்ற இவை இரண்டிற்கும் உள்ள தொடர்பினையும், இவ்வாழ்விலிருந்து கடவுளை அடையும் நெறி யாதென்பதையும் புகட்டுவதாகும். இயற்கை வரன்முறையில் தோற்றத்திற்கு ஒரு கருத்தா இருத்தல் வேண்டும் என்ற எண்ணமே சமயவாழ்வின் அடிப்படையாகும். சமயம் வெறும் குறிகளும், அடையாளமும் அன்று; சமயம் என்பது இவற்றைக் கடந்தும் நிற்பது. மனித மனத்தின் மாசை அகற்றிப் பண்புடையவனாய், ஒழுக்கமுடையவனாய்ப் பிறர்க்கும் பயன்படுவனவாய் வாழ முற்படுவதே சமய வாழ்க்கையாகும்.

சமய இலக்கியத்திற்கும், பக்தியிலக்கியத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. சமய இலக்கியம் சமய நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு எழுகிறது பக்தியிலக்கியம் கடவுளைத் தோத்திரம் செய்யும் இயல்பாய் எழுகிறது. சமய இலக்கியத்துள் குறிப்பிடத்தக்க பகுதி பக்தியிலக்கியமாக விளங்குகிறது. தமிழிலக்கிய வரலாற்றிலே, பல்லவர் காலத்தில் எழுந்த தோத்திரப் பாடல்கள் (Devotional Songs) பக்தியிலக்கியம் என்ற சிறப்புப் பெயரைப் பெறுகின்றன. மந்திரம், தந்திரம், சடங்கு, தத்துவம், அறம், தோத்திரம், புராணம், இதிகாசம் எனப் பலவகையில் சமய இலக்கியம் வெளிப்படுகிறது. ஆயினும், கடவுளைத் தோத்திரம் செய்யும் இயல்பு எல்லாவற்றிலும் காணப்படலாம். எனவே, பக்தியிலக்கியத்தின் தோற்றுவாய் சமய இலக்கியம் என்று கருதப்படுகிறது. இறைவன்மேல் தோத்திரப் பாடல்களாக அமைந்தவற்றை மட்டும் பக்தியிலக்கியங்கள் என்று கூறலாம்.[9] தமிழிலக்கியத்தில் மிகப் பெரும்பகுதி சமய இலக்கியமாகக் காணப்படுகிறது. சமய நம்பிக்கை பக்தியைத் தோற்றுவிக்கிறது.

பக்தி இலக்கியங்களின் முதன்மை நோக்கம் சமயத்தைப் பரப்புவதாகும். கவிதையின் நுவல் பொருள் சமயம், கடவுள், தேவதைகள், துறவிகள், பக்தர்கள் பற்றியதாகவும் மற்றும் சமய வழிபாட்டிடங்கள் பற்றியதாகவும் இருக்கும். பக்திக்கவிஞர்கள் சிறப்பான மனிதர்களைக் கூடப் பாடுவதை விரும்பவில்லை. அவர்களுக்குக் கவிதை என்பது சமயப் பணிக்கு ஒரு கருவியாய் இலங்கியது. மேலும், கவிதை இவ்வுலகில் இங்கு நடப்பதைக் கூறுவதன்று; இதற்கு அப்பால் இதற்கு மேலானதைக் கூறுவதாகும். பக்தியிலக்கியக் காலத்தில் மனித நாட்டக் குறைவு முழுமையடைந்தது என்பர் மணவாளன்.[10]

சங்க இலக்கியமும், பக்தி இலக்கியமும்:—

சமயம் என்ற கொள்கை பழந்தமிழகத்தில் தனியாக உருப்பெறவில்லை; கடவுள் கொள்கைகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. ஆனால், அது ஒரு இயக்கமாக அக்காலத்து வலுப்பெறவில்லை. சமயம் பற்றிய பொதுவான அமைதிச் சூழல்தான் இருந்தது. தொல்காப்பியம் இலக்கியப் பொருண்மையை அகம், புறம் என இருபிரிவுகளிடையே அடக்கியது. ஆயின், அந்நூல் புறப்பொருளில் கடவுள் வாழ்த்துப் பொருளைச் சேர்த்துள்ளது. இக்கடவுள் வாழ்த்து இலக்கியப் பொருண்மையாகி பக்தியிலக்கியம் என்னும் தனி இலக்கிய வகையின் தோற்றத்திற்கு முன்னோடியாகியது.

சங்ககாலத்தில் தெய்வச் சிந்தனையும், தெய்வங்களை வழிபடும் நிலையும் இடம் பெற்றிருந்தனவேயன்றி, தெய்வ வழிபாடும், அத் தெய்வ வழிபாட்டில் அடையும் இம்மை, மறுமை இன்பங்கள், அவற்றிற்கான நெறிகள் வாழ்வின் குறிக்கோள்களாக அமையப்பெறவில்லை. பக்திக் காலத்தில் தெய்வம் வாழ்க்கையின் ஒரு கருப்பொருளாக இருந்த நிலை மாறி, தெய்வங்களை அடிப்படையாகக் கொண்ட சமயங்கள் வாழ்க்கை முழுதும் இடம்பெறும் சூழல் அரும்பத் தொடங்கியது. சமயம் கருப்பொருளாய் இருந்த சூழ்நிலை மாறி, சமயமே வாழ்க்கைக் கருவியாக அமையலாயிற்று. புறச் சமயங்களின் செல்வாக்கிலிருந்து தங்கள் சமயங்களைக் காக்கவும், வளர்க்கவும் ஆழ்வார்களும், நாயன்மார்களும் பேராற்றல் வாய்ந்த பக்தியியக்கத்தைத் தோற்றுவித்தனர். "பத்திப் பெருவழி" எனப் போற்றப்பெறும் பாடல் நெறி

யினைச் சமய இயக்கத்திற்கான வழியாக அமைத்தனர். இங்ஙனம் தமிழ்ப்பாக்கள் சமய வாழ்விற்கான கருவியாயின. தமிழ் பக்திமொழி எனச் சிறப்புப் பெயரைப் பெறத் தோற்றுவாயும் இக்காலத்தில்தான் செய்யப்பட்டது. இதனால் பாடல் முறையிலும் மாற்றம் ஏற்பட்டது. இதன் விளைவாகப் பாடுபொருள் மக்கள் வாழ்வினின்றும் மாறித் தெய்வப் பரவலாக அமையலாயின. பாடல் யாப்பு நால்வகைப் பாக்களினின்றும் மாறி இசை சார்ந்த பாவினமாக மாற்றம் பெறலாயிற்று.

தன்னுணர்ச்சிப் பாக்களின் தலைமை:—

பக்தியக்கக் கவிஞர்கள் புறவுலகைப் பிரதிபலித்துக் காட்டும் நிலையையும் ஓரளவு புறக்கணித்து, தங்கள் உள்ள உணர்ச்சிகளையும், இறைவன்மீது கொண்ட பேரீடுபாட்டையும் தன்னுணர்ச்சிப் பாடல்களாக வடித்தனர். தன்னுணர்ச்சிக் கவிஞர்களிடம் புதிய வடிவங்களைப் படைக்கும் போக்கும், நாட்டுப்புற இலக்கிய வடிவங்களுக்குப் புத்துயிர் அளிக்கும் போக்கும் காணப்படுகிறது. பக்தியிலக்கியங்கள் அகவெளியீட்டுக் கவிதைகளாய் இலங்குகின்றன. கவிஞனின் அகவுணர்ச்சிகளையும், அவன் மனத்தில் இடம்பெறும் உள்ளக் காட்சிகளையும் வெளிப்படுத்துவதே அகவெளியீட்டுக் கவிதையாகும். மாறுதலுக்கு இடையே நிலைபேற்றையும், அலைவுக்கு இடையே அமைதியையும், அழிவுக்கு இடையே என்றுமுள தன்மையையும் நாடி ஏங்கி உணர்தலே அகப்பாட்டின் இயல்பாகும். தமிழிலக்கியத்தில் தன்னுணர்ச்சிப் பாக்கள் தன்னாட்சி செய்த காலம் பக்தியிலக்கியக் காலக் கட்டமாகும். இக்காலத்தில் பல்வேறு உணர்ச்சிக் கனிவுகளின் வெளிப்பாடாகத் தன்னுணர்ச்சிப் பாடல்கள் புறப்பட்டன. பக்தியிலக்கியத்தில் தன்னுணர்ச்சிப் பாக்கள் தனிப்பெரும் தலைமை ஏற்றதற்குப் பல காரணங்கள் உண்டு. தன்னுணர்ச்சிக் கவிஞர்கள் பாக்களைப் புனைய இலக்கிய வழக்கை விட மக்களின் பயில் மொழியைப் பெரிதும் நாடினர். உணர்ச்சிகள் யாவும் மாற்றுருப் பெறாமல் பிறந்த மேனியாய் வந்து விழுந்தன. தன்னுணர்ச்சிப் பாக்களின் ஒரு பகுதி மரபால் அமைந்தது; மறுபகுதி மரபைத் தவிர்த்தது. இதுவே தன்னுணர்ச்சிப் பாக்களின் வெற்றிக்குக் காரணம். நாட்டுப்புறப் பாடல்களின் எளிமையான யாப்பு, உணர்ச்சி பொங்கித் ததும்பும் எளிய நடை, மரபுகளுக்கு அடிமைப்படாத நெகிழ்ந்து

கொடுக்கும் இலக்கிய வடிவம் ஆகிய அனைத்திற்கும் பக்தியிலக்கியம் புத்துயிர் அளித்தது.

பக்திப் பாடல்கள் அகமன அனுபவங்களின் வெளிப்பாடுகளாகும்.[12] அகப்பாடல்களிலிருந்தே பக்திப்பாடல்கள் தோன்றின. ஆயினும், அகப்பாடல்களுக்கும், பக்திப்பாடல்களுக்கும் ஓரளவு வேறுபாடு உண்டு. அகப்பாடலாவது அகமனத்தில் தோன்றும் இன்பம் அதாவது தனக்குத் தானே அனுபவிக்கும் இன்பம் காரணமாகத் தோன்றுவது. ''பக்திப்பாடல்கள் அனைத்தும் அவற்றை ஆக்கிய தனிப்பட்ட மக்களின் அனுபவங்கள் என்று கொள்ளாமல் அவை சமுதாயம் முழுவதற்கும் பொதுவான அனுபவங்கள்''[13] எனக் கொள்ளலாம். எவ்வகைப் பாடல்களைக் காட்டிலும் அகப்பாடலே ஆன்மவெளியீட்டிற்குச் சிறந்த கருவியாய் அமைந்தன. எனவே, அகப்பாடல்கள் நாளடைவில் பக்திப் பாடல்களில் நுழைந்தன. ஒவ்வொரு மனிதனிடமுள்ள ஆன்மாவின் சிறப்பை அறிய பெரிய வாய்ப்பு ஏற்பட்டது. காதல், கடவுள் என்ற இரண்டும் தன்னலமற்றவை. இரண்டும் பிரிக்க முடியாதவை; ஆதலால், காதலைக் கருவியாகக் கொண்டு கடவுளை அடைய முயன்றனர் முன்னோர்.

அக இலக்கியக் கொள்கை:—

பக்திப்புலவர்கள் கையில் சங்க கால மனிதக்காதல் தெய்வீகக் காதலாக மாறியது. இறைவனிடம் உள்ள பக்தியால் இறையன்பைப் பெற்று அவ்வன்பெனும் அருட்பெருக்கில் கரைந்து இறைவனோடு ஒன்றிவிடுதலையே பக்திப்பனுவல்கள் நுவல்கின்றன. ''பக்தியக்கக் காலக் காதலெல்லாம் இறைவனிடம் கொண்ட காதலாக ஒருதலைக் காதலாக உள்ளன.''[14] பெயர் குறிப்பிடப்படாமையால் இன்னார் என்று உணரப்படாத கற்பனை மனிதர் இருவரின் காதலாக இருந்த பாக்கள் மாறி தெய்வத்தின்மீது கொண்ட காதலைப் பாடும் பாக்களாக வளர்ந்தன. கற்பனைக் காதலுக்குப் பின்னணியாக அந்தந்த ஊர்களின் இயற்கைச் சூழல் வருணிக்கப்பட்டிருந்தது மாறிக் கடவுளிடம் செலுத்தும் பக்திக்குப் பின்னணியாக அந்தந்தக் கோயில் தலங்களைச் சூழ்ந்த இயற்கையழகைப் பற்றிய வருணனைகள் அமைந்தன.[15]

பக்திப் பனுவல்களில் இடம்பெறும் அகப்பொருள் பாடல் தலைவன் இறைவன்; ஆகவே, தலைவன் கூற்றாக

வரும் பகுதி அரிதேயாக; தலைவி, தோழி, தாயர் கூற்றாக வரும் பகுதிகளே மிக்குள்ளன. ''மனித உயிரின் மிக்குயர்ந்த அனுபவமே கவிதையில் ஒன்றுபட்டு இன்புறுதல். அது கடவுளோடு ஒன்றுபடும் கணத்தே எழும் நிறைவையும், பேரின்பப் பேற்றையும் தன்வழியே மனித உயிர் துய்க்கத் தருகிற .''[16] என்பர் ரோலண்ட்லூயிஸ். பக்திப் பாடல்களின் குறிக்கோள் ஆன்மாக்கள் இறைவனை அடைந்து இன்புறுவதேயாதலினால் தலைவனைப் பெற விரும்பும் தலைவியின் உள்ள நிலைகளும், தலைவன் பிரிவால் தவிக்கும் நிலையும், அவனை நினைத்து ஏங்கும் ஏக்கமும், அவனை அடைவதற்கு முயற்சியாகத் தூதுவிடலும், மடல்மாக் கூறலும், தானே அவனை அடையச் சேறலும் முதலிய தலைவியின் உணர்ச்சிமிக்க மனநிலைகள் கிளவிப்பொருட்களாக அமைகின்றன. சங்கப் பனுவல்களில் தலைவன் அருளையே நோக்கி நிற்கும் தலைவியின் இடத்தைப் பக்திப் பனுவலில் பாடும் பொருளும், உள்ளுறை வகையில் உலகவர்களாய ஆன்மாக்களும் பெற்றுவிடுகின்றனர். சங்ககால அக இலக்கியங்களில் போற்றப்பெறும் காதல் ஆண், பெண் உடல் பற்றியதும், உயிர் பற்றியதுமாகும். ஆனால், பக்தியிலக்கியங்களில் காணப்பெறும் உறவோ முழுக்க முழுக்க உயிர் பற்றியதேயாகும் இறைவனைக் கூடுவதிலுள்ள உயிர்த்துடிப்பினையே இப்பாடல்களில் காணலாம்.

அகப்பாடல்கள் தற்சாரா நிலையினவாயினும், இப் பக்திப் பாடல்கள் பக்தனின் தன்னுணர்வுப் பாடல்களாகத் தற்சார்பு நிலையுடனேயே அமைகின்றன. தூய அகப்பாடல் நெறிப்படி இவை அகமல்லாவிடினும் பக்தியுணர்வு வெளியீட்டிற்கு அகம் ஒரு சிறந்த களனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டு, அகமும், பக்தியும் கலந்த ஒரு புது இலக்கியப் பாங்கு உருவாயிற்று எனலாம். திணைப்பகுப்பு முதன்மை பெறாது கருத்து முதன்மை பெற்றது. பாவகைகளை வடிவாகக் கொண்டு இயன்ற அகம் இங்குப் பண்நிறைந்தப் பாவினங்களையும் வடிவாகக் கொள்கின்றது. காதலே முழுமையாக இருந்த அகநிலை மாறிக் காதல் இங்குக் கருவி மட்டுமாகின்றது. அகப்பாடல்களுக்கும், பக்திப்பாடல்களுக்கும் வேறுபாடு விளங்குமிடம் பாடல்களின் வடிவிலேயேயாகும்.

மனிதனும், இறைவனும் கொண்ட அன்புப் பிணைப்பு இங்குக் காதலாகக் காட்டப்படுகிறது. அகத்திணை நெறியில்

மானுடக்காதல் இறைக்காதலாக மாறுதலும், பெயர் சுட்டா நிலையின் ஒரு பகுதி பிறழ்ந்தது போன்றே இங்கும் தலைவனாகிய இறைவன் பெயர் சுட்டப்படவில்லை. சங்க அகநெறிப்பாக்கள் தலைவன் கூற்றைத் தர, பக்திநெறிப் பாக்கள் தலைவன் கூற்றைத் தராமையும் குறிப்பிடத் தக்கது. தலைவி தன் காதலைத் தானே புலப்படுத்தவில்லை எனும் நெறியும் இங்கு மாற்றம் பெற்றுப் பாடல்கள் கிளவிகளாகப், பாத்திரக்கூற்றாக அகமாந்தர் வாயிலாக வெளிப்படும் பாங்கு மாற்றமுற்றுப் புலவர் கூற்றாகவும் வெளிப்படுகின்றன.

பக்தியிலக்கியங்களில் இறையுறைத்தலங்கள் பாடலின் இணைப்பொருளாகவும், துணைப்பொருளாகவும் காணப்படுகின்றன. இறைவன் தலத்தைச் சார்த்திப் பாடும்போது அடியவரையும், அன்பரையும், தன் நெஞ்சையும் அத்தல இறைவன்பால் ஆற்றுப்படுத்தும் நிலையில் பாக்கள் காணப்படுகின்றன. புரவலனைப் பரிசில் வேண்டி அணுகும் புலவன் போல, இறைவன் அருள் வேண்டி அணுகும் பக்தனைப் பக்திப் பாடல்களில் காணலாம். இறை பக்தியை அக இலக்கிய நெறியில் எடுத்தியம்பும் பாக்கள் வலிவும், பொலிவும் பெற்றிலங்குகின்றன என்ற உண்மையைக் ''கடவுள் காதலைப் பாடியருளிய ஆழ்வார் நாயன்மார்கள் மக்கள் காதல் நெறியினைப் பின்பற்றியதாலன்றோ—தெய்வ அன்பு அக இலக்கியத்தடத்தில் பாய்ந்ததாலன்றோ—தமிழகத்தின் இறைப்பாசுரங்கள் புதுமையும், தனிமையும் பெற்ற ஓர் இலக்கிய உலகமாக விளங்குகின்றன.''[17] இவ்வாறு அகப்பாடல் நெறி பக்தி நெறிக்குப் பேருதவியாய் அமைந்தது.

பக்தியிலக்கிய வகைமை வளர்ச்சி:

இந்திய வாழ்க்கையில் சமயங்களும், தர்சனங்களும், கொள்கைகளும், சடங்குகளும், கடவுள்களும் தவிர்க்க முடியாத சரித்திர நிர்ப்பந்தங்கள். இவை அவ்வக்காலத்து உன்னதங்கள்—என்றால் தவறில்லை.[18]

இந்து சமயமானது வேதம், உபநிடதம், புராணம், இதிகாசம் ஆகியவற்றை உள்ளடக்கிக்கொண்டுள்ளது; வேதம் என்றால் அறிவு என்பது பொருள். வேதம் என்பதைத் தெய்வீக அறிவு என மதவாதிகள் பொருள்படுத்துகிறார்கள்.

காதால் கேட்டு மனைப்படுத்தும் வேதத்தைச் சுருதி எனவும், கவிதைநடையில் உள்ள வேதத்தை மந்திரம் எனவும் அழைத்தனர்; ரிக் வேதம் செய்யுளால் ஆனது; யஜூர் வேதம் வசனத்தால் ஆனது; சாமவேதம் கவிதையால் ஆனது; இசைத்துப் பாடுதற்குரியது; அதர்வணவேதம் காலத்தால் மிகவும் பிற்பட்டது. பொதுவாகக் கிரமம், பதம், கனம், சடை என்ற நான்கு முறைகளால் வேதம் வழி வழியாக ஓதப்பட்டு இன்றுவரை அழியாது காப்பாற்றப்பட்டு வருகிறது. வேதத்தின் இறுதியில் சேர்க்கப்பட்டதால் வேதாந்தம் என்றழைக்கப்படும். இவை எண்ணிக்கையில் பலவாயிருந்தாலும் 108 உபநிடதங்களே சிறந்தனவாகக் கொள்ளப்படுகின்றன. இவ் வுபநிடதங்கள் குரு, மாண வனுக்கு எடுத்துக் கூறும் வகையில் வினாவிடையாக அமைந் திருக்கின்றன.[19]

9. ஆ. வேலுப்பிள்ளை, தமிழர் சமய வரலாறு, ப. 114.
10. A. A. Manavalan, Prolegamena in S. V. Subramanian and T. V. Veeraswamy (ed); Literary Theory of Tamil, An Introduction - Volume 1, P. XXIX.
11. ப. அருணாசலம், பக்தி இலக்கியம், ப. 189.
12. அ. ச. ஞானசம்பந்தம், இலக்கியக்கலை, ப. 205.
13. Hudson, Introduction to Literary Criticism, P. 93.
14. ந. வள்ளியம்மாள், அகப்பொருள் கொள்கைகள், ப. 119.
15. மு. வரதராசன், தமிழிலக்கிய வரலாறு, ப. 123.
16. Roland Lewis, Creative Poetry, P. 79.
17. ரா. பி. சேதுப்பிள்ளை, திருவள்ளுவர் நூல் நயம், ப. 56.
18. பிரபஞ்சன், எழுபதுகளில் கலை இலக்கியம், ப. 31.
19. மா. சு. சம்பந்தம், அச்சும் பதிப்பும், பக். 521-522.

(தொடரும்)

திருவைந்தெழுத்தின் திறன்

செஞ்சொற்கொண்டல், தமிழாகரர், நல்லாசிரியர்,
முனைவர். சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.
[தமிழ்ப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை]
(முன்னிதழ் ௬௬ ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு விட்ட எழுத்து 'வ', விடாத எழுத்து 'இ'; இவற்றை ('சிவ' 'சிவ') என்னும் எண்ணியிருப்பவர் தம்முயிர் சிவபரம் பொருளின் திருவடியிற் கூடிப் பேரின்பம் நுகரப் பெறுவர் என்று குறித்தல் நோக்கத்தக்கது.

'தூல பஞ்சாக்கரம்' (நமசிவாய) 'சூக்கும பஞ்சாக்கரம்' ஆகியவற்றைத் திருமூலர் ஓதுவர்:

''ஆலய மாக அமர்ந்தபஞ் சாக்கரம்
ஆலய மாக அமர்ந்தவித் தூலம்போய்
ஆலய மாக அறிகின்ற சூக்குமம்
ஆலய மாக அமர்ந்திருந் தானே''[18]

நகர முதலாகத் திருவைந்தெழுத்து ஓதும் முறையையும், சிகர முதலாக ஓதும் முறையையும் திருமூலர் குறித்துள்ளனர்.[19]

''நகார மகார சிகார நடுவாய்
வகாரம் இரண்டும் வளியுடன் கூடி''
''சிகார வகார யகார முடனே
நகார மகார நடுவுடன் நாடி''

சிவநாதனின் திருவடிகளே இம் மந்திரப் பயன் என்பதைத் திருமூலர் தெளிவுறுத்தியுள்ளனர்:[20]

''மந்திர மாவதும் மாமருந் தாவதும்
தந்திர மாவதும் தானங்க ளாவதும்
சுந்தர மாவதும் தூய்நெறி யாவதும்
எந்தை பிரான்றன் இணையடி தானே''

மூவர் திருவாக்குகளில்:

திருஞானசம்பந்தர் இரண்டு திருப்பதிகங்களும், திருநாவுக்கரசர் ஒரு திருப்பதிகமும், சுந்தரர் ஒரு திருப்பதிகமும், திருவைந்தெழுத்தின் திறன் பொருளாகப் பாடியருளியுள்ளனர்.[21]

திருவருட்பயனில் மறைபொருள் காட்டல்:

சைவசித்தாந்த சாத்திரங்களுள், உமாபதி தேவநாயனார் பாடியருளிய திருவருட் பயனில், 'ஐந்தெழுத் தருணிலை' என்ற 9ஆவது அதிகாரம், திருவைந்தெழுத்தின் மறைபொருளை விளக்கி, அதனை ஓதும் முறைகளையும், அதனுள் இறைவன் திருவருள் நிலை விளங்குமாற்றையும் உணர்த்துகின்றது.

திருவைந்தெழுத்துள், ஒவ்வோரெழுத்தும் குறிக்கும் பொருள்கள்: இறை, சத்தி, பாசம், மாயை, உயிர் என்கின்றது திருவருட்பயன்:[22]

''இறைசத்தி பாசம் எழின்மாயை ஆவி
உறநிற்கும் ஓங்காரத் துள்''

கட்டு, வீடு என்னும் இரண்டும் ஐந்தெழுத்தால் அமையும் என்பதனை, 'மகார நகாரம் ஆகிய மலமும் திரோதமும் மிகவும் இறுகப் புணர்ந்து யகாரம் ஆகிய உயிர்களைத் திரும்பவிடா; அவ்வுயிர்கள் தம் பெரிய பிணியாகிய மல இருள் தீருங்கால் சிகாரம் ஆகிய சிவத்தினை அடையும்' என்ற பொருள்பட அமைந்த பின்வரும் திருவருட் பயன் குறள் உணர்த்தும்:[23]

''விரியமந மேவி யவ்வை மீளவிடா சித்தம்
பெரியவினை தீரிற் பெறும்''

''சிகார வகாரம் என்னும் இரண்டும் ஆதிக்கண் வைத்து உச்சரித்தல் கூடுமாயின் அந்நிலையே உனது பிறவித் துன்பம் நீங்கும்; வீடுபேற்றினை விரும்பும் நீ உச்சரிக்கும் முறை இது'' என்று உணர்த்தும் பிறிதொரு குறள்:[24]

''சிவமுதலே ஆமாறு சேருமேல் தீரும்
பவம்இதுநீ ஓதும் படி''

''அவ்வாறு உச்சரிக்குங் காலத்து, வகாரம் ஆகிய அருள் சிகாரம் ஆகிய சிவத்தினைக் காட்டி யகாரம் ஆகிய உயிரினை வீட்டின்பத்திலே இருத்தும்'' என்றும் கூறி அருளின் தன்மையை வகுத்தது, ''வாசிஅருளியவை வாழ்விக்கும்''[25] என்ற தொடர்.

உமாபதி தேவநாயனார் காலத்திற்கு முன் உண்மை விளக்கம் அருளிய மனவாசகம் கடந்தாரும் திருவைந் தெழுத்தின் மறைபொருளை விளக்கியுள்ளனர்.[26]

சைவர் கடன்:

தமிழ் மந்திரங்களுள் தலையான சிறப்புடையதாகிய திருவைந்தெழுத்தின் பொருளமைப்பை உணர்ந்து, ''எண்ணும் அஞ்செழுத்தே'' என்ற மெய்கண்டார் ஆணைப்படி,[27] அதனை எப்போதும் எண்ணி அம்மந்திரப் பொருளில் ஒன்றியிருத்தல் சைவர் கடன்.

---

18. திருமந்திரம் — திருவம்பலச் சக்கரம்-899
19. திருமந்திரம் — மேற்படி-953
20. திருமந்திரம் — ஞாதுரு ஞான நேயம்-1578
21. திருஞானசம்பந்தர்-307, 280; திருநாவுக்கரசர்-11; சுந்தரர்-48
22. திருவருட்பயன் — 82
23. மேற்படி — 84
24. மேற்படி — 87
25. மேற்படி — 88
26. உண்மை விளக்கம்
27. சிவஞானபோதம்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
191732

தமிழ் நாள், கிழமை, திங்கள் இதழ்களில் எழுதுவோரின் சிந்தனைக்கு

முனைவர் ச. முத்துக்குமரன், துணைவேந்தர்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

நாள், கிழமை, திங்கள் இதழ்களை மக்கள் எதற்காகப் படிக்கிறார்கள்?

1. பொது அறிவைப் பெருக்கிக்கொள்ளவும்
2. மொழி அறிவைப் பெருக்கிக்கொள்ளவும்
3. நாட்டு நடப்பை அறிந்துகொள்ளவும்
4. புதிய புதிய கருத்துக்களை அறிந்துகொள்ளவும்
5. நல்ல புனைகதைகளைப் படித்து வாழ்வியல் அறிவு பெறவும்
6. நகைச்சுவை போன்ற பல சுவைகளை அனுபவித்து மகிழவும்

இன்னும் இவைபோன்ற பல காரணங்களுக்காகவும் இதழ்களை மக்கள் படிக்கிறார்கள். மக்கள் இவ்வாறான பயன் பெற வேண்டி, இதழ் வெளியிடுபவர்களே நல்ல வெளியீட்டாளர்கள். வீணே பொழுதைக் கழிப்பதற்கும், ஊர் வம்பை அறிந்துகொள்ளவும் படிப்பவர்கள் உண்டு. அவர்கள் நிலத்திற்குப் பாரமாக வாழ்பவர்கள். அவர்களுக்கும் விலங்குகளுக்கும் அதிக வேற்றுமையில்லை. அவர்களுக்கென்றும் நாள், கிழமை, திங்கள் இதழ்கள் வெளியிடப்படுகின்றன. அவற்றைப் பற்றியும் அவர்களைப் பற்றியும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. மக்களாகப் பிறந்தும் மக்களாக வாழாதவர்களைக் கண்டு இரக்கப்படலாம். சிலர் அவர்களின் குறைகளைத் தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு வாழ்கின்றனர்; அவர்கள் இழிந்தோராவர். அவர்களைக் கண்டு இரங்கி அவர்களுக்கு இறைவன் நல்வழி காட்ட வேண்டும் என்று எண்ணுவதே நாம் செய்யத்தக்கதாகும்.

முன்னர் குறிப்பிட்ட ஆறு குறிக்கோள்கள் கொண்ட இதழ்கள் எவை? அவற்றை எவ்வாறு இனம் காண்பது?

நல்ல இதழ்கள் எவ்வாறு இருக்க வேண்டும்? என்பதைப் பற்றிச் சிந்திப்போம்.

''செய்வன திருந்தச் செய்'' என்றனர் நம் முன்னோர். எந்த மொழியில் எழுதினாலும் அந்த மொழியின் இலக்கண விதிப்படி தவறின்றி எழுத வேண்டும். கொச்சையாக எழுதியவற்றைப் படிப்போரின் மொழி அறிவு பாழாகும். மற்ற மொழிச் சொற்களைத் தேவையின்றிக் கலந்து எழுதியதைப் படிப்போரின் பொது அறிவும் மொழி அறிவும் தாழ்ந்து போகும்.

நம் மொழியில் தக்க சொல் இருக்கும்போது அதைப் பயன்படுத்தாது வேற்றுமொழிச் சொல்லைப் பயன்படுத்தினால் நாம் நம் மொழிச் சொல்லை இழக்கிறோம். மொழிக்கு ஒரு புதிய சொல் வந்தாலும் பழைய சொல் ஒன்றை இழந்துவிடுவதால் மொழிக்கு நன்மையில்லை. படிப்பவர்க்கும் நன்மையில்லை. மேலும் நம் மொழி கலப்படத்தால் தன் இயல்பை இழக்கிறது. நாமும் எதையும் திருந்தச் செய்யும் பழக்கத்தை இழக்கிறோம்.

ஒரு மொழி அம்மொழி பேசும் மக்களின் கலையையும் பண்பாட்டையும் காட்டும் கண்ணாடி எனலாம். நாம் நம் தமிழ் மொழிச் சொற்களை இழந்து அவற்றிற்குப் பதிலாக வேற்று மொழிச் சொற்களை நம் மொழி அமைப்புக்கு ஏற்ப மாற்றாமல் பயன்படுத்துவதால் நம் கலைகளையும் பண்பாட்டையும் இழக்கும் சூழ்நிலை உருவாகும். மொத்தத்தில் நம் மொழியில் சொற்கள் இருக்கும்போது அவற்றைப் பயன்படுத்தாது பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தும்போது நாம் நம் மொழியையும் இழந்து நம்மையும் இழக்கிறோம்,

தமிழ் நாட்டில் தமிழில் வெளிவரும் ஒரு பெயர் பெற்ற கிழமை இதழை ஒரு மாதிரிக்காக எடுத்துக்கொண்டு ஆராய்ந்தோம். அவ்விதழில் மூன்று மாதங்களில் (சனவரி 1991 முதல் மார்ச்சு 1991 முடிய வெளிவந்த இதழ்களில்) மூன்று முறையோ அல்லது அதற்கு மேலோ பயன்படுத்தப் பட்ட 350 ஆங்கிலச் சொற்களைப் பட்டியலிட்டோம்; அவற்றில் சில சொற்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவை எத்தனை முறை பயன்படுத்தப்பட்டன என்பதும் அவற்றிற்குச் சரியான தமிழ்ச் சொற்களும் பக்கத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளன.

அட்வான்ஸ்	7	முன் பணம், முன்னேற்றம்
ஆர்ட்டிஸ்ட், ஆர்டிஸ்டு	9	கலைஞர்
ஆபீஸ்	51	அலுவலகம்
இங்கிலீஸ்	16	ஆங்கிலம்
இன்டர்வியு	15	நேர்முகத்தேர்வு
இன்ஸ்பெக்டர்	9	ஆய்வாளர், காவல் அதிகாரி
இன்ஸல்ட்	9	நிந்தை, அவமரியாதை, வசைமொழி
ஈகோ	4	அகங்காரம், தன் முனைப்பு
எடிட்டர்	6	பதிப்பாசிரியர்
எம்டி	6	மேலாண் இயக்குனர்
ஓகே	10	எல்லாம் சரி, ஆம்
ஓட்டல், ஹோட்டல்	38	உணவு விடுதி, உணவகம்

இத்தமிழ்ச் சொற்கள் யாவும் ஓர் எளிய பள்ளி மாணவனுக்கும் தெரிந்தவையே. நமது நாள் இதழ்களிலே இவை அடிக்கடி பயன்படுத்தபடுபவையே. இருந்தாலும் கனியிருக்கக் காய் கவருமாறு போல நல்ல தமிழ்ச் சொல்லை விடுத்து வேற்று மொழிச் சொல்லை சிலர் பயன்படுத்துவது ஏன்? அதுதான் நாகரிகம் என்று நினைப்பவர் சிலர். தம் வேற்று மொழி அறிவை விளம்பரப்படுத்த விழைபவர் சிலர். அந்தச் சொல்தான் பொருத்தம் என்று விவாதிப்போர் சிலர்; இன்னும் சிலர் ஒருபடி மேலே போய் இவ்வாறு எழுதுவதன் வாயிலாகத்தான் தமிழை வளர்க்க முடியும் என்றும் பேசி வருகின்றனர். உண்மையான காரணம் என்ன என்பது சிந்திப்பவர்களுக்குத் தெரியும். கற்றவனுக்கும் மற்றவனுக்கும் உள்ள வேற்றுமை கற்றவன் மொழியில் தூய்மை இருக்கும். மற்றவன் மொழி கொச்சையாக இருக்கும். ஒருவர் எழுதியதில் பயன்படுத்திய வேற்று மொழிச் சொற்களைப் பட்டியலிட்டு அவற்றிற்கு இணையான தமிழ்ச் சொற்கள் உள்ளனவா என்று பார்த்தல் வேண்டும். அவர் பயன்படுத்திய சொற்கள் பொருத்தமானவையா? அல்லது வேண்டாதனவா? என்று காணல் வேண்டும். அப்போதுதான் அவர் தமிழை வளர்க்கிறாரா? அல்லது சிதைக்கிறாரா? என்பது விளங்கும்; நாமும் அவரை யார் என்று இனம் காணமுடியும்.

மொழிக் கலப்பால் வரும் தீங்குகளை நாம் விளக்கும் போது சிலர் "ஆங்கிலத்தைப் பாருங்கள்; ஆங்கிலம் மற்ற மொழிச் சொற்களின் கலப்பை ஏற்றதால் அல்லவா வளர்ந்தது? நாமும் அவ்வாறு மற்ற மொழிச் சொற்களின் கலப்பை ஏற்றால்தான் தமிழ் வளரும்" என்று எதிர் வழக்காடுவர். இவ்வாறு அவர்கள் ஏன் ஒரு பெரும் பொய் வழக்காடுகிறார்கள் என்பது விளங்கவில்லை. ஆங்கிலத்தில் மற்ற மொழிச் சொற்கள் ஆளப்பெறுகின்றன என்பது உண்மை; ஆனால் அவர்கள் தங்கள் மொழிச் சொற்களுக்கு மாற்றாக வேற்று மொழிச் சொற்களைப் பயன்படுத்துவது இல்லை. ஆங்கிலேயன் யாரும் "Turn Left" என்பதை "Turn Edappakkam" என்று எழுதுவது இல்லை; ஏன் தமிழில் "லெப்ட்லே கட் பண்ணிப் போ" என்று எழுதுபவர் கூட ஆங்கிலத்தில் எழுதும் போது அப்படி எழுதுவது இல்லை. இவர் எழுதிய "லெப்ட்லே கட் பண்ணிப் போ" என்பதை ஆங்கில எழுத்துக்களில் ஒலி பெயர்த்து எழுதினால் அதாவது "Leftle cut pannippo" என்று எழுதினால் அது ஆங்கிலம் ஆகாதா என்று கேட்டால் இவர் பதில் என்னவாக இருக்கும்? மேலும் ஆங்கிலத்தில் சேர்த்துக்கொண்ட மற்ற மொழிச் சொற்கள் யாவும் ஆங்கிலப்படுத்தப்பட்டே சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. கிரேக்க, இலத்தீன் சொற்கள் மட்டும் அல்ல, தமிழ்ச் சொற்கள் கூட ஆங்கிலப்படுத்தப் பட்டிருப்பதை நாம் பார்க்கலாம். கட்டுமரம் என்ற சொல் கட்டமரான் (Catamaran) என்றுதானே எடுத்தாளப்படுகிறது? கடைசியாக ஆங்கிலப்படுத்தாது அல்லது அவர்கள் நாட்டில் பயன்படுத்தாத ஒரு வேற்று மொழிச்சொல்லை நாம் ஆங்கிலத்தில் பயன்படுத்தினால் அதைச் சாய்ந்த எழுத்துக்களில் எழுத வேண்டும் என்று விதி இருப்பதால் அவ்வாறுதானே நாம் ஆங்கிலத்தில் எழுதுகிறோம். ஆகவே இன்று தமிழில் ஆங்கிலச் சொற்களைக் கலந்து எழுதுவதைப் போல—இன்றும் சரி என்றும் சரி—ஆங்கிலத்தில் ஆங்கில நாட்டில் செய்யவில்லை என்பதை நம்மவர்கள் உணர வேண்டும்.

மேலும் பட்டியல் தயாரிக்கும்போது, "காபி, கிலோ மீட்டர், சாக்லேட், சிகரெட், லிட்டர்" போன்ற பொது வழக்கில் உள்ள ஆங்கிலச் சொற்கள் சேர்க்கப்படவில்லை; மற்ற சொற்கள் யாவும் இப் பட்டியலில் சேர்க்கப்பட்டன. சிலர் இப் பட்டியலில் உள்ள சில ஆங்கிலச் சொற்கள்

அவற்றிற்குச் சரியான தமிழ்ச்சொற்களைவிட நன்றாக விளங்குவதாகச் சொல்லக்கூடும். மேலும் சில ஆங்கிலச் சொற்களுக்கு எதிராகக் கொடுக்கப்பட்ட தமிழ்ச் சொற்கள் பொருளை விவரிப்பனவாக உள்ளன என்றும் குறை கூறலாம். எடுத்துக்காட்டாகக் கீழ்வரும் சொற்களைச் சொல்லலாம்.

ஆட்டோ,
ஆட்டோரிக்ஷா — பொறியூர்தி, தானியங்கி (வண்டி)

ஐஸ்கிரீம் — குளிர் பாற்குழம்பு, குளிர்பாலேடு

கிரிக்கெட் — மரப் பந்தாட்டம்

சோபா — சாய்விருக்கை

டப்பிங் — வேற்றுமொழிப்பதிவு

டிசைன் — வரையுரு, தினுசு, உருமாதிரி

வெளிநாட்டிலிருந்து நமக்குக் கிடைத்த பொருட்களுக்கு வேற்றுமொழிப் பெயர்கள் இருப்பது நியாயமே. போன நூற்றாண்டிலே மேலை நாடுகளில் இருந்துவந்த எலக்ட்ரிசிடி (Electricity) மின்சாரமாகவும், டிரெயின் (Train) புகை வண்டியாகவும் தமிழில் மொழி பெயர்க்கப்படவில்லையா? அங்ஙனமே, மற்ற சொற்களையும் மொழிபெயர்க்கமுடியும் என்பதில் ஐயமில்லை. நாம் நம்முடைய சோம்பலினால் அவசியமின்றிப் பல பிறமொழிச்சொற்களைப் பயன்படுத்து கிறோம்:

மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து (திருக்குறள் 603)

மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும் (திருக்குறள் 608)

என்றார் வள்ளுவர்; அஃதாவது அழிக்கும் இயல்புடைய சோம்பலைத் தன்னிடம் கொண்ட அறிவில்லாதவன் பிறந்த குடி அவனுக்கு முன் அழிந்துவிடும். நல்ல குடியில் பிறந்தவனிடம் சோம்பல் வந்து பொருந்தினால், அஃது அவனை அவனுடைய பகைவர்க்கு அடிமை ஆகுமாறு செய்துவிடும். (மு. வரதராசனார் - திருக்குறள் தெளிவுரை); நாமும் சோம்பலுக்கு இடம் கொடுத்தால் அது நம் மொழியையும், அதன் விளைவாகப் பண்பாட்டையும், கலைகளையும் அழித்து விடும்.

தமிழுக்கும், தமிழருக்கும் நன்மை செய்ய விழைவோரும் நல்ல குறிக்கோளுடன் இதழ்கள் நடத்துவோரும் இக் கட்டுரையில் இணைக்கப்பட்டுள்ள சொற்பட்டியலைக் காண வேண்டுகிறேன். மேலும் வேண்டிய அளவுக்கு இப் பட்டியலை விரிவாக்கிக்கொள்ளவும் வேண்டுகிறேன்.

நாமும் நம் வழித்தோன்றல்களும் நல்ல தமிழராக வாழவும் நம் பண்பாடும் கலைகளும் வளரவும் தக்க முயற்சியை மேற்கொள்வது நம் கடமையாகும். தமிழ் எழுதுவோர் சிந்திக்க வேண்டுகிறேன். நமக்கு இக் கடமையைப் பற்றிச் சிந்திக்கவும், அக் கடமையை நிறைவேற்ற முயற்சி எடுக்கவும் இறைவன் அருளை வேண்டு கிறேன்.

———

உள்ளதம்மா இவ்வுலகம்

உள்ளதம் மாயிவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் கிடைப்ப தாயினும் இனிதெனத்
தனித்திருந் துண்ணார். உடல்சோம் பியிரார்.
தம்தொழிற் பண்பை மறவார். புகழெனின்
உயிரும் கொடுப்பர். பழியெனின் உலகுடன்
பெறினும் கொள்ளார். முறையிலா வழிகளில்
எதையும் என்றும் முயலார். எம்கடன்
பணிசெய்து கிடப்பதே நன்றென
வாழும் நன்மக்கள் உண்மை யானே.

—டாக்டர். ச. முத்துக்குமரன்
துணைவேந்தர்,
பாரதிதாசன் பல்கலைக் கழகம்

அஜமும் ஆனைந்தும்

சித்தாந்த கவிமணி மு. பெ. சத்தியவேல் முருகன், B.E.

வளர்ச்சி மனிதனுக்கு மட்டுமல்ல; சொற்களுக்கும் உண்டு. சொற்களில் பல அவை தோன்றியபோது கொண்ட கருத்து ஒன்றாயிருக்க அதிலிருந்து மாறி சிதைவுண்டு ஒவ்வாத கருத்தில் கையாளப்படும் அவல நிலைக்கு ஆட்படுவதுண்டு. இதற்கு காலத்தைக் குறை கூறுவது தவறு. காலம் என்ன செய்யும்? முப்பத்தாறு தத்துவங்களின் வரிசையில் நியதிக்கு முன்னே வரும் சடம்தானே அது? அவ்வக் காலங்களில் வரும் மனிதர்களே இதற்கு எல்லாப் பொறுப்பையும் ஏற்க வேண்டியவர்கள். முதுக்குறைவு என்றால் தமிழில் ஆழ்ந்த அறிவு என்று பொருள். இந்த முதுக்குறைவினால் அல்ல, மதிக் குறைவினால் சில மனிதர்கள் பொருள் மிகுந்த சொற்களுக்குத் தீங்கு செய்து அவற்றிற்கு பொருளற்ற பூச்சுகளைச் செய்து பின்வரும் தலைமுறையினரிடையே புழங்க விட்டுச் சென்று விடுகிறார்கள். 'பாவம்! பின்வருவோர்' என்று கழிவிரக்கம் கொள்வது ஒரு புறமிருக்க, 'பாவம்! அந்த சொற்கள்' என வருந்துவதும், அவற்றைச் சரியான பொருளில் திருத்தி உலவ விடுவதுமே இன்று நம் தலையாய கடனாகும். ஏனெனில் அந்த சொற்களுக்கு உயிருந்தால் அவை உரிய மன்றத்தில் தொடர்புடையவர்கள் மீது மானநட்ட வழக்கு தொடர்ந்திருக்கும். ஆனால் அவையோ உயிரற்றவை; ஆண்டவனை நம்பி அமைதியாகக் கிடக்கின்றன.

இங்ஙனம் பாதிப்புண்ட சொற்களில் ஒன்றுதான் சைவ சமய இலக்கியங்களில் காணப்பெறும் 'ஆனைந்து' என்ற சொல் இந்த சொல் எங்ஙனம் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளது என்று அறியுமுன் இச் சொல்லே போல் வேறு ஒரு சொல் பட்டுள்ள பாட்டினைக் காண்பது சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்கும்.

சைவ சமயத்தைச் சார்ந்த அன்பர்கள் அனைவரும் தேவார முதலிகள் வேள்வியினையும் வேள்வியின் சிறப்பையும் விதந்தோதியுள்ளதை அறிவர். ஆனால் வேள்வி என்றாலே அதில் பலியாக உயிர்க் கொலையும் செய்வது உண்டு என்ற உண்மை கருணை உள்ளம் படைத்த சைவர் மனத்தைக் கலக்காமல் இராது. ஆண்டவனைத் தீமுகத்தில் அன்பின் ஆற்றலால் மேம்படுத்தித் தோற்றுவித்து வழிபடும் இந்த வழிபாட்டு முறையில் உயிர்க் கொலை எங்ஙனம் இணைந்தது? இது ஒரு பெரிய கேள்விக் குறி. இதற்குச் சரித்திரமே சான்று பகர்கிறது.

வேள்வியினைத் தொடக்க காலத்தில் செய்யும்போது அன்பர்கள் வேள்வியில் அவி சொரிந்திருக்கிறார்கள். ஆனால் அந்த அவி அறுத்த ஆட்டின் துடிக்கும் சதைகளல்ல. முளையாத நெல்லினைத்தான் அவியாகச் சொரிந்திருக்கிறார்கள். வட மொழியில் அஜம் என்றால் பிறப்பில்லாதது என்று பொருள். ஜம் என்றால் பிறப்பது. அதனாற்றான் உயிரினங்களுக்கு வடமொழியில் ஜந்து என்று பெயர் வழங்கக் காண்கின்றோம். எனவே ஜம் என்ற இந்த வடமொழி வேர்ச்சொல்லோடு 'அ' என்கின்ற அன்மைப் பொருட்டான உபசர்க்கம் சேர அது அஜம் என்றாகி பிறப்பில்லாதது என்று பொருள் தரும்.

அஜம் என்ற முழுச் சொல் - அதாவது வேர்ச்சொல் வேறொன்று உண்டு; அதற்கு ஆடு என்று பொருள். அறிவின்மையினால் ஆட்டிற்கு அந்தப் பெயர் வந்தது. எனவே அஜம் என்ற சொல்லுக்கு ஆடு என்றும் அதே நேரத்தில் பிறப்பில்லாதது என்றும் இருபொருள் உண்டு.

இவ்வாறிருக்க வேள்வியில் அவியாவது அஜம் என்று பெரியோர்கள் கூறிச் சென்றுள்ளனர். அன்பினை அடிப்படையாகக் கொண்டு அத் தீ வழிபாட்டினை வகுத்த ஆன்றோர்கள் அஜம் என்றது முளையாத நெல்லினை— வறுத்த நெல்லினை, வறுத்த நெல்லுக்குப் பொரி என்று பெயர்.

திருஞான சம்பந்தர் ஆதரித்த வேள்வியில் பொரிதான் பயன்படுகிறது. திருவிழிமிழலையில் திருஞானசம்பந்தர் தாம் கண்ட அற்புத வேள்வியை வருணிப்பதை அவர்தம் திருப்பாட்டில் காண்க:

அகனமர்ந்த அன்பினராய் அறுபகைசெற்
றைம்புலனும் அடக்கிஞானம்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்
துள்ளிருக்கும் புராணர்கோயில்

தகவுடை நீர் மணித்தலத்துச் சங்குளவர்க்
கந்திகழச் சலசத்தீயுள்
மிகவுடைய புன்குமலர்ப் பொரி யட்ட
மணஞ்செய்யும் மிழலையாமே.

பொரியட்டிச் செய்யும் வேள்வியினையே ஞானசம்பந்தப் பெருமான் ஆதரித்தார். இதுவன்றி மற்ற வேள்விகளை - உயிர்க் கொலை புரிந்து செய்யும் வேள்வியினை ஞானசம்பந்தர் வெறுத்தனர் என்பது திருவீழிமிழலையில் பொரியட்டிச் செய்யும் வேள்வியினை மற்றொரு பாடலில் ''கேடிலா வேள்வி செய் அந்தணர் வேதியர் வீழிமிழலையார்'' என்று கூறுவதினின்றும் தெளிவாகும். கேடிலா வேள்வி என்றதனால் கேடுமலிந்த வேள்வி என்ற ஒன்று உண்டு என்பதனைக் குறிப்பினால் பெறவைத்தார். இது அருத்தா பத்தியின் வகைப்படும்.

இனி, அஜம் என்ற சொல்லுக்கு மீண்டும் வருவோம். அஜம் என்பது வறுத்த நெல்லாகிய பொரியினைக் குறிக்க சிலர் அதற்கு வேறு பொருள் கொண்டு - ஆடு என்ற பொருள் கொண்டு ஆட்டை அறுத்து அவியாக்கி விட்டனர். அஜம் என்றால் விளையா நெல் என்ற சிறந்த பொருளை அவர்கள் தவற விட்டனர். ஆண்டவன் வழிபாட்டில் அன்போடு கொள்ளத்தக்க பொருளைக் கொள்ளாமல் அறியாமையினால் அஜம் என்றால் ஆடு என்று தகாத பொருள் கண்டு வேள்வியில் உயிர்க் கொலையை இணைத்து விட்ட பாவிகளை என்னென்பது? இது எத்துணை பெரிய அநியாயம்? என்று கொதித்தெழுகிறார் கந்தரபூதி பெற்று கந்தரநுபூதி சொன்ன எந்தை அருணகிரிநாதர்.

அவர்தம் அற்புத அந்தாதியான கந்தரந்தாதியில் அருணகிரிநாதர் பதறுவதைப் பாருங்கள் :

தீதா வசவ னுபவிக்க மண்ணினும் விண்ணினுஞ் செந்
தீதர் வசவநியாயஞ்செய் வேதியரே தியங்காத்
தீதா வசவ னிமலர் செல் வாசாக் கிரவசத்த
தீதா வசவன் புறப்பா ரெனுமுத்தி சித்திக்கவே.

மேல்கண்ட பாடலின் திரண்ட பொருள்: ''இம்மையில் புகழையும் மறுமையில் மோகத்தையும் பெற நினைத்துப் பழிக்கஞ்சாமல் ஆட்டினைக் கொன்று அநியாய வேள்வி

செய்கின்ற மறையோரே! முத்தி வேண்டுமானால் பரம சிவனது மைந்தனான முருகப்பெருமானை சாக்கிர அவத்தையிலும் துரியாதீதத்திலும் எங்களுக்கு நல்லறிவு உண்டாக அன்பு வைத்தருள் என்று துதியுங்கள்!''

இந்தப் பாடலில் ''தீதா அச அநியாயம் செய் வேதியரே'' என்று அருணை முனிவர் சாடுவதை அன்பர்கள் கருத்தூன்றி கவனிப்பார்களாக. (அசம்—ஆடு). அநியாயம் என்று இங்கே அருணை முனிவர் எடுத்தாள்கின்ற சொல் ஆழமான பொருட்குறிப்பு உடையது. 'தீதாய் அசவரியா நின்ற வேதியரேதியங்கா' என்றும் பாடியிருக்கலாம். ஆட்டை அரிந்து என்று சொல்லாமல் ஆடு என்று அநியாயம் செய்கின்ற வேதியர் என்று கூறினது பொருள் பொதிந்தது. தவறு ஒருவன் செய்ய அதைச் சுட்டிக்காட்டியபின் தவற்றை உணர்ந்து திருந்தாமல் தன் தவற்றை நியாயப்படுத்துவது இருக்கிறதே அதுவே அநியாயம்! அதாவது தெரியாமற் செய்வது தவறு; தெரிந்து செய்வது அநியாயம். எனவே ஆட்டை அறுத்து வேள்வியில் அவியிடுவது தவறு என்று தெரிந்தும் வேதியர் (ஆரிய அந்தணர்) ஆட்டை அறுப்பதைத் தொடர்ந்தனர் எனத் தெரிகிறது.

'வேதாகம நிருபணம்' என்ற ஒரு நூல் யாழ்ப்பாணம் அச்சுவேலி குமாரசாமி குருக்கள் என்பவரால் ஆக்கப்பெற்று 1951ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. நூல் இரண்டு பாகங்களை உடையது. அதில் இரண்டாம் பாகத்தில் 65ஆம் பக்கத்தில் நூலாசிரியர் - ஓர் அந்தணர் - வேள்வியில் நடத்தும் உயிர்க் கொலையை எங்ஙனம் நியாயப்படுத்துகிறார் என்பதைக் காணுங்கள் :

''வேள்விக் கொலை தீங்கு பயவாது நன்மையே பயக்கும். வேள்வியில் கொலையுண்ட உயிர் மேலுலகத்துச் சென்று இன்பந் துய்க்கும் ஆதலானும் எழுப்பப்படும் ஆதலானும் ஆம்.

கந்தபுராணம்

புன்மையாம் பசுத்தடிந்து புரையில்வேள்வி யாற்றியே
தொன்மைபோ லெழுப்புமாறு சுருதிசொற்ற வாறுபோல்
மன்மதன் தனைப்படுத்து மாதைவேட்டு மற்றதன்
பின்முறைக்கண் நல்கஎம் பிரானினைந்த னன்கொலாம்.

யாகாதிபதி சிவனேயாதலால் அவர்க்கு அவிக்கு நேர்ந்த உயிர் இந்த அபுத்தி பூர்வ சிவபுண்ணியத்தால் மறுமையிலே புத்திபூர்வ சிவபுண்ணியம் செய்து சிவஞானம் உற்று முத்தி எய்தும். இக்காலத்து மீண்டும் யாகபசுவை எழுப்பும் சத்தி இல்லாதவர் யாகபசுவைக் கொன்று யாகஞ் செய்தல் ஆகாது. அது அப்பய்ய தீட்சிதர் தமது காலத்து யாகம் ஒன்று இயற்றி ஈற்றில் யாகபசுவை எழுப்ப அது எழுந்திலது. அவ்வமயத்து தீட்சிதர் வேதத்தை நோக்கி, 'சுருதியே! உன்னை நம்பி இப் பசுவைப் படுத்தேன். எழாதாயின் எனது உயிரைப் படுப்பேன். இது நிச்சயம்'' என்று கூறிய உறுதிமொழியை வேதபுருடன் கேட்டு வெளிப்பட்டு 'நின் வாய்மைப் பத்தியின் பொருட்டு இப்பசு எழுந்துவிடும். இனி இக் கொடுங்கலியில் பசுப்படுத்து யாகம் செயற்க; செய்யின் எழாது' என்று சொல்லி மறைந்தனன் என்னும் சரித்திரத்தில் வைத்து உணரப்படும்.

இதனால் வேள்வியிற் கொலை அவ்வுயிர்க்கு நன்மை பயத்தலால் கொலையன்றென்பதும், ''யாகபசுவை எழுப்புஞ் சத்தியில்லாதவர் அது செய்யலாகாதென்பதும் அறிந்து கொள்க.''

அன்பர்களே! மேலே நூலாசிரியர் வேள்விக் கொலையை எங்ஙனம் நியாயப்படுத்துகிறார் என்பதை ஊன்றிக் கவனியுங்கள். வேள்வியிற் கொலை அவ்வுயிர்க்கு முடிவில் முத்தியை நல்கும் எனின் வேள்வி செய்யும் அந்தணர் தம் உயிரையே கொடுத்து முத்தியை எளிதாகப் பெற்றுக் கொள்ளலாமே! அன்றி ஓர் உயிரை ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்துவிட்டபின் மீண்டும் அதை எழுப்புவது எனின் அர்ப்பணித்தது போலி என்றாகாதா? இன்னோரன்ன கேள்விகளுக்கு அவர்தம் கூற்றில் விடையின்மையை காண்க. ''பசுப்படுத்து யாகஞ் செய்யற்க'' என்று வேதபுருடன் கூறினான் என்று சொல்லிய உடனே இதனால் வேள்வியிற் கொலை அவ்வுயிர்க்கு நன்மை பயத்தலால் கொலையன்று என்று கூறுவது அவர்க்கு உள்ள தடுமாற்றத்தைக் காட்டுகிறதல்லவா? அப்படியிருந்தும் வேள்விக் கொலையை அவர் நியாயப்படுத்த முயல்கிறார் இல்லையா? இதைத்தான் அருணகிரிநாதர் அநியாயம் என்று சாடுகிறார்.

இப்படி தலைமுறை தலைமுறையாக வரும் மற்றொரு அநியாயம் 'ஆனைந்து' என்று தமிழிலும் 'பஞ்சகவ்வியம்'

என்று வடமொழியிலும் வழங்கிவரும் சொற்களுக்குக் கொள்ளப்படும் பொருள் ஆகும்.

ஆன் என்ற தமிழ்ச் சொல்லுக்கு பசு என்று பொருள். பசுவின் மடி சுரக்கும் பால் இறைவனுக்குத் திருமஞ்சனம் ஆட்டுதற்கு உரியது. பால் மட்டுமல்ல, பாலின் திரிபுப் பொருள்களும் இறைவர்தம் திருமஞ்சனத்திற்கு உரியன. திருமஞ்சனத்திற்கு உரிய இப் பொருள்கள் யாவை எனப் பட்டியல் இடும்போதுதான் தவறிப் போயுள்ளோம்.

ஆனைந்து என்பவை யாவை? தேன், நெய், பால், பசுவின் சிறுநீர், பசுவின் சாணம் ஆகிய ஐந்தும் என்பர் சிலர். வேறுசிலர் பால், தயிர், நெய், பசுவின் சிறுநீர், பசுவின் சாணம் ஆகியவையே ஆனைந்து என்பர். முதலாமவர் கூற்றில் தேன் வருவதைக் காண்க. தேன் பசுவின் பயனில்லை; மாறாக வண்டின் பயனாதலால் ஆனைந்தில் தேனைச் சேர்த்தல் இயலாது எனத் தெளிவாகக் கூறிவிடலாம். இனி எஞ்சுவது இரண்டாமவர் கூற்று. அதில் பசுவின் சிறுநீர் மற்றும் பசுவின் சாணம் ஆகியவை கூறப்படுகின்றன அல்லவா? சைவச் சான்றோர்களே! இங்கே நன்கு ஊன்றி நோக்குக! காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ் குறியாம் இலிங்கத்தை - இறைவர்தம் திருவடையாளத்தை நாம் அன்போடு திருமஞ்சன மாட்டும்போது பசுவின் சாணத்தையும் பசுவின் சிறுநீரையும் கொண்டு திருமஞ்சனம் ஆட்டுதல் தகுமா? முறையோ! அப்படி நம் ஆன்றோர்கள் அறிவிற்கு ஒவ்வாதவற்றிற்கு - இவ் விழிதகைச் செயலுக்கு - உடந்தையாய் இருந்திருப்பார்களாக? இதனை நன்கு சீர்தூக்கி பார்த்தல் ஒன்றே நாம் வேண்டுவது.

தடைகள் தோன்றும்போது தக்க விடைகள் கிடைப்பது திருமுறையில் தாம். நயந்திற்கு சுந்தரனார் என்று போற்றப் பெறும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இதுபற்றி நயத்தக்க தீர்ப்பு ஒன்றைத் தருகிறார். திருநின்றியூர்த் திருப்பாட்டில் அவர் போகிற போக்கில் இதுபற்றி தெளிவான தீர்ப்பை எளிதாகச் சொல்லிச் செல்கிறார். பாடல் வருமாறு:

''வஞ்சங்கொண் டார்மனஞ் சேரகில்லார்
நறுநெய்தயிர் பால்
அஞ்சங்கொண் டாடிய வேட்கையினார்
அதிகைப் பதியே

தஞ்சங்கொண் டார்தமக் கென்றும்
இருக்கை சரண்அடைந் தார்
நெஞ்சங்கொண் டார்க்கிடம் ஆவது
நந்திரு நின்றியூரே''

இதில் ''நெய், தயிர், பால் அஞ்சுங் கொண்டாடிய வேட்கையினார்'' என்று குறிப்பிடப்படுவதைக் காண்க. நெய், தயிர், பால் ஆகிய ஐந்தும் விரும்பி ஆடியவர் என்பது பொருள். நெய், தயிர், பால் என்று கூட்டினால் மொத்தம் மூன்றே கிடக்க அவற்றை ஐந்து என்று சுவாமிகள் கணக்கிட்டுக் கூறியிருப்பதைக் காண்க. இந்த ஒரு பாடலில் மட்டுமல்ல. இன்னும் ஓர் பாடலில் இப்படியே சுவாமிகள் குறிப்பிடுகிறார். அப் பாடல் வருமாறு :

''மாலை உரித்ததன்கொண் டங்கம் அணிந்தவனை
வஞ்சர் மனத்திறையும் நெஞ்சணு காதவனை
மூவர் உருத்தனதாம் மூல முதற்கருவை
மூசிடு மால்விடையின் பாகனை ஆகம்உறப்
பாவகம் இன்றிமெய்யே பற்றும் அவர்க்கமுதைப்
பால்நறு நெய்தயிரைந் தாடு பரம்பரனைக்
... ...''

—திருக்காளப்பேர் திருப்பதிகம்.

இன்னும் இதுபோல திருமுறைகளில் பல பாடல்களைக் குறிப்பிடலாம். விரிவஞ்சி விடுக்கின்றேன். ஆயின் ஒவ்வோரிடத்திலும் ''பால், நறுநெய், தயிர் ஐந்தாடு பரம்பரன்'' என்றபடியே தவறாமல் குறிப்பிடுவதைக் காண்க.

(தொடரும்)

''செந்தமிழ்ச் செல்வி''

ஆண்டுக் கையொப்பம்		வாழ்நாள் கையொப்பம்	
உள்நாடு	ரூ. 25.00	உள்நாடு	ரூ. 250-00
வெளிநாடு	ரூ. 125-00	வெளிநாடு	ரூ. 750-00

''சண்டிகா''

தமிழகக் கோயில் கலைச் செல்வர்
தி. இராசமாணிக்கம், பி.ஏ., பி.காம்., விசாரத், பொள்ளாச்சி.

அன்னை பராசக்தியின் திருவுருவங்களில் ஒன்று மகிஷாசுரமர்த்தினி, ''சில்பரத்தினம்'' என்ற நூலின்படி எருமையின் தலைமீது நிற்கும் இவளது பத்துக்கைகளில் ஒன்றில் சூலம் காணப்பட வேண்டும், ''விஷ்ணுதர் மோத்திரம்'' என்ற நூலின்படி எருமையின் தலைமீது நிற்கும் சண்டிகா என்ற வடிவிற்கு அமைக்கப்படும் 20 கைகளில் மூன்றில் சூலம், உடுக்கை, மற்றும் நாகபாசம் இருக்க வேண்டும். எருமையின் தலைமீது நிற்கும் காத்யாயினியின் வடிவின் பத்துக் கைகள் ஒன்றில் சூலம் உருவாக்கப்பட வேண்டும் என்பது ஆகமங்களில் உள்ள விதியாகும்; மேலே கூறப்பட்ட எந்த வடிவும் கையில் கபாலம் ஏந்தியுள்ளதாகக் கூறப்படவில்லை. பொதுவாக ஆலயங்களில் காணப்படும் மகிஷாசுரமர்த்தினியின் வடிவில் (உதாரணமாகத் தஞ்சைப் பெரிய கோயில்) முன் இரு கைகள் அபய வரத முத்திரைகளில் இருக்க, பின்னிரு கைகளில் சங்கும் சக்கரமும் அமைக்கப்பட்டிருக்கும்;

இவற்றினின்றும் வேறுபட்ட வடிவம் பொள்ளாச்சியை அடுத்துள்ள ஊத்துக்குழி அமணேசுவரர் திருக்கோயிலில் கோஷ்ட வடிவமாக உள்ளது; 4 கைகளி கொண்ட இந்த வடிவின் காலடியில் எருமையின் தலை காணப்படுகிறது; பின் இடக்கையில் உடுக்கையும், பின்வலக்கையில் நாக பாசமும் இருக்க, முன்வலக்கையில் சூலம் காணப்படுவது ''விஷ்ணுதர்மோத்திரம்'' என்ற நூலின்படி உள்ளது; ஆனால் முன் இடக்கையில் கபாலம் உருவாக்கப்பட்டுள்ளது இந்த வடிவின் சிறப்பாகும்; கபாலம் சிவபெருமானுக்கு உரியது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது;

கபாலத்தைக் கையில் ஏந்தியுள்ள 'சண்டிகா' என்ற இந்த வடிவம் அரிய ஒன்றாம்;

பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார்

டாக்டர் அ. ம. சத்தியமூர்த்தி,
தமிழ் முதுநிலை விரிவுரையாளர்,
மன்னர் சரபோசி அரசு கல்லூரி,
தஞ்சாவூர்-613 005.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழுலகில் நமச்சிவாயர் என்னும் பெயரில் பலர் காணப்படுகின்றனர். இந் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர்களின் வரலாறு எழுதுபவர்களுள் பெரும்பாலானோர் நமச்சிவாய ஐயர், நமச்சிவாயச் செட்டி, நமச்சிவாய நாவலர், நமச்சிவாயப் பிள்ளை, கா. நமச்சிவாய முதலியார் முதலானோர் பெயர்களைச் சுட்டிச் செல்கின்றனர். இவர்களில் ஒருவரான கா. நமச்சிவாய முதலியாரின் வாழ்வு, பணி ஆகியவற்றைப் பற்றிச் சுருங்கச் சொல்லி விளங்க உரைப்பது இக்கட்டுரையின் கருத்தாகும்.

வாழ்க்கை :

நம்மில் பலரால் வள்ளல் என்றும், பேராசிரியர் என்றும் போற்றப்படும் தகுதியைப் பெற்றவர் கா. நமச்சிவாயர். இவர் வடார்க்காடு மாவட்டத்திலுள்ள காவேரிப்பாக்கம் என்னும் கிராமத்தில் 20-2-1876 அன்று திரு. இராமசாமிக்கும் திருமதி. அகிலாண்டவல்லி அம்மையாருக்கும் மகனாராகப் பிறந்தார். இவர் தந்தையார் திண்ணைப்பள்ளி ஒன்றின் ஆசிரியர் ஆவார். அவரிடம் கல்வி பயின்ற நமச்சிவாயர், தம் வாழ்வுப் பணியினை நோக்கி 1891இல் சென்னை வந்தடைந்தார்.

ஆசிரியப் பணி :

தமது பதினாறாம் வயதில் (1891) சென்னை வந்தடைந்த நமச்சிவாயர் முதன் முதலாகத் தொண்டையார் பேட்டையில் உள்ள ஒரு பள்ளியின் ஆசிரியராக வாழ்க்கைப் பாதையில் அடியெடுத்து வைத்தார். அதனையடுத்து 1895-இல் ஓராண்டுக் காலம் சென்னை உயர்நீதி மன்றத்தில் பணியாற்றினார். இவர் பணியாற்றிக்கொண்டிருக்கும்

போதே 1892 முதல் 1905 வரை திருமயிலை சண்முகம் பிள்ளை அவர்களிடம் இலக்கண, இலக்கியங்களைப் பயின்றார்.

தொடர்ந்து செயின்ட் சேவியர் உயர்நிலைப் பள்ளியில் நான்கு ஆண்டுகள் பணியாற்றிய நமச்சிவாயர், நார்த்விக் மகளிர் உயர்நிலைப்பள்ளி, கடற்கரைச் சாலையிலிருந்த சிங்களவர் கல்லூரி ஆகியவற்றிலும் தமிழாசிரியராகப் பணியாற்றினார். இவர் 1902 முதல் 1914 வரை சென்னை வேப்பேரி எஸ். பி. ஜி. உயர்நிலைப் பள்ளியில் பணிபுரிந்தார்.

அடுத்து 1914 இல் புதிதாகத் தோன்றிய இராணிமேரிக் கல்லூரியில் முதன்முதலாகத் தமிழாசிரியராகச் சேர்ந்து பணியாற்றிய நமச்சிவாயர், தாம் பதவி ஓய்வு பெறுவதற்கு முன்பாகச் சிறிது காலம் மாநிலக் கல்லூரியிலும் பணி புரிந்தார். இவ்வாறாக, இவரது ஆசிரியப் பணி சென்னையைச் சார்ந்து அமைந்தது.

பிற பணிகள் :

நமச்சிவாயர் 1917இல் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் தேர்வுக் குழுவின் உறுப்பினராக இருந்தார். தொடர்ந்து அவர் 1920 முதல் 1931 வரை அக் குழுவின் தலைவராகவும் பணியாற்றினார்.

நமச்சிவாயர் சென்னை தொண்டை மண்டல துளுவ வேளாளர் உயர்நிலைப்பள்ளி ஆட்சிக் குழுவின் துணைச் செயலாளராகத்தம் வாழ்நாள் இறுதிவரையிலும் பணியாற்றியுள்ளார்.

சென்னை குமாரசாமி நாயுடு சன்ஸார் நமச்சிவாயரது நூல்கள் பலவற்றை வெளியிட்டுள்ளனர். நமச்சிவாயர் தாம் சொந்தமாகத் தமிழ்க் கடல் ஆபீஸ் என்னும் அச்சகத்தை நிறுவி, தமது நூல்கள் பலவற்றை அதன் வழியே வெளியிட்டார். சாந்தோம் கடற்கரை ஓரமாகத் தாம் கட்டிய வீட்டிற்குக் 'கடலகம்' என்று பெயரிட்டார்.

நமச்சிவாயரின் மனைவியார் திருமதி. சுந்தரம்மாள் ஆவார். இவர்களுக்கு இரண்டு ஆண்மக்களும் இரண்டு பெண்மக்களும் உண்டு. நமச்சிவாயரின் மூத்த மகன் திருத்தணிகைவேல் என்பவர் ஆவார். 'புலவர் வறுமை' என்னும் நூலினை எழுதிய நமச்சிவாயர் வறுமைக்கான

காரணங்களை உணர்ந்து, அவற்றைக் களைந்து செல்வச் சிறப்புடன் வாழ்ந்தார். இவர் தமது 61 ஆம் வயதில் 13—3—1936 அன்று காலமானார்.

தமிழ்ப்பணி:

நமச்சிவாயரின் நூல்களைச் சிறுவர் நூல்கள், படைப்பிலக்கியங்கள், பதிப்பு நூல்கள், ஆய்வு நூல்கள் என நான்கு வகையாக்கிக் காட்டலாம்.

சிறுவர் நூல்கள்:

ஒருவரது மனத்தில் ஆரம்ப காலத்தில் பதியும் சில கருத்துகள் கால வளர்ச்சியில் கூட மாற்றம் அடைவதில்லை. இதனைத் தெளிவாக உணர்ந்திருந்தவர் நமச்சிவாயர். எனவேதான் இவர் சிறுவர்களுக்கெனப் பல கதை நூல்களை எழுதினார். அவற்றுள் இயற்கைப் பொருட் கதைகள், பஞ்ச தந்திரம் சுகிர்லாபம், ரோமாபுரிக் கதைகள் போன்றவை குறிப்பிடத்தக்கவை ஆகும்.

'ஓரணா வாசகர் வரிசை'யில் நளன், குசேலன், உருத்திரன், சந்திரா, குமணன், புத்தன், சீவகன், கண்ணப்பன், விநோதக் கூற்றுகள், விக்ரமார்க்கன், கம்பரும் சோழனும், புலவர் வறுமை எனும் பன்னிரண்டு நூல்களை நமச்சிவாயர் எழுதியதாக அறிய முடிகிறது.[1] இவ்வனைத்தும் சிறுவர்களுக்கென்று இவரால் எழுதப்பட்டவை ஆகும்.

சிறுவர்களுக்கு இளம் வயதிலேயே சைவ சமயப் பற்றை ஊட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன், அவர்களுக்கென்று எளிய நடையில் நமச்சிவாயரால் எழுதப்பட்டது திருஞான சம்பந்தர் என்னும் நூலாகும்.

சிறுவர்கள் விரும்பும் வகையில் நமச்சிவாயரது சிறுவர் நூல்கள் எளிய நடையில், இடத்திற்கேற்பப் பாடல்களையும் பெற்று அமைந்தன.

இளம் வயதிலேயே நீதிநூல் கருத்துகளைச் சிறுவர் மனத்தில் பதிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் நமச்சிவாயர் உரை, குறிப்பு முதலியவற்றை எழுதிப் பதிப்பித்த நூல்களும் உண்டு. அவ்வகையில் அறப்பளீசுர சதகம், குமரேச சதகம் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம், நல்வழி நன்னெறி, நீதிநெறிச் சாரம் ஆகிய நூல்களும் இடம்பெறும்

ஒன்று முதல் ஒன்பது வரையிலான வகுப்புகளுக்குத் தமிழ்ப் பாட நூல்களையும் நமச்சிவாயர் எழுதியுள்ளார்.[2]

இளமையில் சிறுவர்கள் பிழையின்றி எழுதத் தொடங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் நமச்சிவாயர் நான்காம் வகுப்பிற்குரியதாகச் 'சிற்றிலக்கண வினாவிடை' என்னும் நூலினை எழுதினார். இவர் 'வாக்கிய இலக்கணம்' என்னும் ஒரு நூலினை எழுதியுள்ளதாகவும் குறிப்பிடுவர்.[3]

---

1. காண்க: கா. நமச்சிவாயரின் குசேலன் என்னும் நூலின் இறுதி அட்டைப் பக்கம்.
2. காண்க: கலைக்களஞ்சியம் தொகுதி 6இன் பக்கம் 294.
3. காண்க: சிறுவை. மோகனசுந்தரத்தின் 'வள்ளல் கா. நமச்சிவாயர்' ஆய்வுலகம் போற்றும் ஆசிரிய மணிகள், பாரி நிலையம், சென்னை, 1980 என்னும் கட்டுரையின் பக்கம்-190.

(தொடரும்)

காலமிது! காலமிது!

செ. ப. பன்னீர்செல்வம், சிங்கப்பூர்.

மரியாதை மருந்துக்கும் கிடைக்காத காலமிது
மதியில்லாக் கிறுக்கர்களின் நல்வாழ்வுக் காலமிது
உரியாரை நல்லாரை, படியேற்றார் காலமிது
வளஞானி வள்ளுவனும் யாரென்பார் காலமிது
தமிழ்மண்ணில் வாழ்ந்தாலும் தமிழறியார் காலமிது
தமிழ்தமிழர் புகழ்பொறுக்க முடியாதார் காலமிது
தமிழ்பேசக் கூசுகிற தலைக்கனத்தார் காலமிது
தமிழன்னை கண்களிலே நீர்வழியுங் காலமிது

பொய்சொல்லித் திரிவோரின் கையோங்குங் காலமிது
பொறுமைக்கு மதிப்பில்லாக் கலிமாந்தர் காலமிது
மெய்யென்றால் யாதென்று கேட்பார்தம் காலமிது
மோதலையே வாயார வரவேற்பார் காலமிது
செய்ந்நன்றி மறப்பாரின் மதிப்பான காலமிது
செயல்வேண்டாம் சொல்போது மென்பாரின் காலமிது
செய்கடனை எண்ணாத செவ்விகளின் காலமிது
செவ்விதின் வாழ்வோரை மதியாதார் காலமிது!

கவுந்தியடிகளின்—பெயர்க்காரணம்

டாக்டர். எஸ். சவுந்தரபாண்டியன்,
எம்.ஏ., எம்.ஏ., பி.எட்., டிப்.வ.மொ., பிஎச்.டி.,
காப்பாட்சியர், அரசினர் கீழ்த்திசைச்சுவடிகள் நூலகம்,
சென்னை-5.

கவுந்தி என்பது சிலப்பதிகாரம் குறிக்கும் பெண் துறவியின் பெயர்;

கவுந்தி + அடிகள் = கவுந்தியடிகள்

கோவலன், கண்ணகி இருவருக்கும் மதுரை செல்லும் போது வழித்துணையாகச் சென்றுள்ளார் கவுந்தி. எனவே, அக்காலப் பழக்கப்படி கையில் வலுவான கோலை அவர் வைத்திருக்க வேண்டும். உருண்டு திரண்ட அந்த வலுவான கோலே கந்து எனப்படுவது. கந்தை உடையவர் என்பதால் கந்தி என்ற பெயர் அமைந்தது;

கந்து + இ = கந்தி

கந்து — பகுதி; இ — உடைமைப்பொருள் விகுதி

கந்தி என்பதே பிறகு இடை 'வ்'கரம் பெற்றுக் கவுந்தி ஆவது;

வ் + உ = வு; வ் — பெயரிடைநிலை; உ — சந்தி

அக்காலத்துச் சமணப் பெண் துறவிகளுக்குக் கந்தி என்ற பொதுப் பெயர் இருந்திருக்க வேண்டும்.

சீவகசிந்தாமணி பேசும் கந்துக்கடன் என்ற பெயரையும், 'கந்து' எனும் இதே அடிப்படையில் ஆயவேண்டும்.

மதிப்புரை

இரண்டாம் வீரநாயக்கர் நாட்குறிப்பு 1778—1792)

[ஆசிரியர்: ஓர்சே. மா. கோபால கிருஷ்ணன். வெளியீடு: நற்றமிழ்ப் பதிப்பகம். E-11, பி. ஏ. டவர்ஸ், 33, ஹால்ஸ் சாலை, எழும்பூர், சென்னை-8, விலை: ரூ: 100-00; கிடைக்குமிடம்: சை. சி. நூ. கழகம்.]

தமிழகத்தின் ஒரு பகுதியான புதுவை மாநிலம் மூன்று நூற்றாண்டுகட்கு மேலாகப் பிரெஞ்சு நாட்டு ஆட்சிக்கு உட்பட்டு, இன்றும் தனி மாநிலமாகத் திகழ்கிறது. பிரான்சு மன்னர்களின் ஆட்சி தொடர்ந்து அங்கு நடைபெற்றதால் அங்கே பிரெஞ்சுப் பண்பாடு நிலைத்துவிட்டது; இந்நிலையில் அங்கு நடைபெற்ற ஆட்சி முறை, மக்கள் நிலை பற்றிய செய்திகளை அறிந்துகொள்ளப் பெரிதும் உதவுவது ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பாகும் (1736—1761).

அதன்பின் பிரெஞ்சுக்காரருக்கு ஆட்சியில் உதவியாக இருந்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் இரண்டாம் வீரநாயக்கர். (1778—1792) இக்கால கட்டத்தில் தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் படித்தவற்றையும் இணைத்து இத் தின சரிதையை எழுதியுள்ளார்.

புதுவை மாநிலத்தின் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி அரசியல், வரலாறு, மக்கள் வாழ்க்கை முறை முதலியவற்றைத் தொகுத்துச் சொல்லும் அரிய நூலாக இது அமைந்துள்ளது. ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்புக்கு அடுத்ததாக வைத்து மதித்துப் போற்றப்பட வேண்டிய நூல்;

மொழிநடையைப் பொறுத்தவரை ஆனந்தரங்கம் பிள்ளை நடையை ஒத்தே அமைந்துள்ளது. புதுவைப் பகுதியை வெள்ளையர்கள் கைப்பற்றிய வரலாறு இக் கால கட்டத்தில் நடைபெற்றதாதலால் விரிவாகவும் சுவையாகவும் கூறப்பட்டுள்ளது;

இப் பயனுள்ள தினசரிதையைத் திரு. ஓர்சே. மா. கோபால கிருஷ்ணன் அவர்கள் பாரிசு மாநகரத்தில் ஒரு நூலகத்தில் தேடி எடுத்துப் படியெடுத்து நன்முறையில்

பதிப்பித்துள்ளார்: எதிர்பாராது கிடைத்த பெருஞ் செல்வத்தைத் தமிழ் மக்கள் படித்துப் பயன்பெற வேண்டு மென்பதற்காக மிக நல்ல முறையில் பதிப்பித்துள்ளார்: மொழிநடையைச் சிறிதும் மாற்றாமல் அரும்பாடுபட்டு நூலைப்பதிப்பித்தமைக்காகப் பதிப்பாசிரியரைப் பாராட்டு கிறோம்.

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

டாக்டர். ச. முத்துக்குமரன் அவர்கள்
துணைவேந்தர்,
பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சி.
(61ஆம் பிறந்தநாள் நினைவாக) 1000 00

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள்
(கழக ஆட்சியர்) 10 00

திரு. ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள்
(கழக மேலாளர், ஓய்வு) 5 00

திரு. முருக விசாகநம்பி அவர்கள் 5 00

திரு. A. T. A. ஈஸ்வர அடிகளார் 5 00

தூத்துக்குடி திரு. தி. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் 5 00

சூரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள் 5 00

கல்லை. தே. கண்ணன் அவர்கள்
[ஆசிரியர் 'வள்ளுவர் வழி'] 5 00

பெரு. தமிழ்வேந்தன், பவானிசாகர் 5 00

திரு. K. வேணுகோபால், சென்னை-14 25 00

திரு. பழனி ஆறுமுகம் அவர்கள், சேக்கிழார் பதிப்பகம்,
கிள்ளான், மலேசியா. 15 00

திரு. த. ஆறுமுகம் அவர்கள்,
51, வெங்கடராமய்யர் தெரு, சென்னை-79. 5 00

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக 80, பிரகாசம் சாலை, சென்னை-108, அப்பர் அச்சகத்தில் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது; ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி எம்.ஏ., பி.லிட்.

191732

கழகப் புதிய வெளியீடுகள்

அரசியல் மேதை அம்பேத்கார்

திரு. மோ. பாலசுப்பிரமணியம், எம்.ஏ., பி.லிட். 16 00

மகாராட்டிரத்தின் ஒரு மூலையில் குக்கிராமம் ஒன்றில் பிறந்து இன்று குவலயம் முழுவதும் "அரசியல் மேதை" என்ற புகழ் ஒளி வீசும்—ஒடுக்கப்பட்ட மக்களின் ஒளிவிளக்காகத் திகழும் பாபா சாகேப் டாக்டர் அம்பேத்காரின் வரலாற்றை இன்பச் சுவை சொட்டும் வகையில் திகழ்வது இந் நூல்.

பேரகத்தியமும் புதிய ஐந்திரமும்

புலவர் இரா. இளங்குமரன் 14 00

கடல்கோளால் அழிந்துபோன நூல்களுள் ஐந்திரமும் ஒன்றென்பர் ஆனால் ஐந்திரம் என்ற பெயருடன் அண்மையில் ஒரு நூல் வெளிவந்து ஐயப்பாட்டின் மொத்த உருவமாகத் திகழ்கிறது இதை உரசிப் பார்த்து, ஒப்புநோக்கி ஆராய முற்பட்டு எழுதப் பட்டதே இச் சிறுநூல் நூலாசிரியரின் நடை தமிழ் மக்களால் ஏற்கெனவே மிகப் போற்றப்பெறுவது நாடறிந்த செய்தியாகும்.

தமிழர் தோற்றமும் பரவலும்

புலவர் கா. கோவிந்தன் 20 00

பாவாணர் அவர்களால் மிகவும் போற்றிப் புகழப்பட்ட பேராசிரியர் வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந் நூலின் பெருமை யுணர்ந்து முன்னாள் சட்டமன்றத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்களைக் கொண்டு அழகிய தமிழில் கழகம் மொழிபெயர்க்கச் செய்து வெளியிட் டுள்ள சிறந்த பயனுள்ள—அனைவரும் படிக்க வேண்டிய நூல்.

உன்னை நீ உயர்த்த வேண்டுமா?

புலவர் இரா. இளங்குமரன் 10 00

சமுதாயம் முன்னேறத் தனிமனிதன் முன்னேற வேண்டும். அதற்குச் சரியான நெறிமுறைகளைக் கூறுவதில் திருக்குறளுக்கு நிகர் வேறு இல்லை. அதனால் திருக்குறளில் இருந்து நல்ல நெறிமுறை களைக் கூறி நாம் வாழ்க்கையில் உயர்நிலை எய்த வழிகாட்டுகின்றார் ஆசிரியர்.

பதிவு எண் : M / 4899 JUNE 1992

Asian Educational Services

(C-2-15, SDA. New Delhi-110016.)

Branch : No. 5, Sripuram First Street,
Royapettah, Madras-600 014.

Phone No. 865040

A Comprehensive Tamil and English Dictionary —WINSLOW M.		165	00
English Tamil Dictionary —WINSLOW		165	00
Abithana Chinthamani-Encyclopaedia of Tamil Literature —SINGARAVELLU MUDALIAR		165	00
Thirukkural Original Tamil with English Translation —DREW & LAZARUS	GB	50	00
	HB	35	00
	PB	20	00
Tamil Moli Akarathi (Tamil-Tamil Dictionary) Coming Shortly —KATHIRAIVER PILLAI		165	00
A Grammar of the Common Dialect of the Tamil language —JOSEPH BESCHI		145	00
Dictionary of Tamil Proverbs —LAZARUS JOHN		195	00

Books can be had of :

The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, Ltd.,
184, T T K Road, Madras-18.

Branches :

79, Prakasam Saalai (Broadway), Madras-108.
Tirunelveli-6. Madurai-1. Coimbatore-1.
Kumbakonam-1. Trichirappalli-2. Salem-1.

அப்பர் அச்சகம், சென்னை-108.